APPEALS FROM AFFLICTION

துன்பத்தில் மன்றாட்டுகள்



33 Prayers for Victory in Vulnerability

பலவீனத்தில் வெற்றிக்கான 33 ஜெபங்கள்

These prayers were born in the long night of the soul— in seasons of hidden tears and unspoken grief, when rejection wore many faces: overqualified yet unwanted, unqualified yet burdened with vision, passed over, misunderstood, cast aside.

They rose from the crucible of countless small deaths— micro-wounds of daily despair, macro-shadows of loss and isolation, emotional tempests, spiritual wilderness, physical darkness that words fail to name.

Yet in the deepest valley, a whisper remained: “Thank You, Father.”

These letters to Heaven were penned not in triumph, but in trembling trust— raw, unpolished, honest before the Throne.

And now, by the mercy of the Father, in the Name of the Lord Jesus Christ, and through the fire of the Holy Spirit, these private cries are released as public light— that any fellow traveler in the shadows might find companionship on the road, and glimpse the dawn that always follows the darkest hour.

May every reader who opens these pages hear the same gentle voice that carried the writer: “You are not alone. I have heard every prayer. The morning comes.”

To the glory of the One God— Father, Son, and Holy Spirit— whose perfect Oneness turned my midnight into song.

Amen.

இந்த ஜெபங்கள் ஆத்துமாவின் நீண்ட இரவில் பிறந்தன— மறைந்த கண்ணீர்களும் பேசப்படாத துயரங்களும் நிறைந்த காலங்களில், நிராகரிப்பு பல முகங்களை அணிந்திருந்தபோது: அதிக தகுதியுடையவனாக இருந்தும் விரும்பப்படாதவன், குறைந்த தகுதியுடையவனாக இருந்தும் பார்வையால் சுமக்கப்பட்டவன், புறக்கணிக்கப்பட்டவன், தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டவன், ஒதுக்கிவைக்கப்பட்டவன்.

அவை எண்ணற்ற சிறு மரணங்களின் உலையிலிருந்து எழுந்தன— தினசரி துயரத்தின் சிறு காயங்கள், இழப்பு மற்றும் தனிமையின் பெரிய நிழல்கள், உணர்ச்சிக் காற்றழுத்தங்கள், ஆவிக்குரிய பாலைவனங்கள், சொற்களால் விளக்க முடியாத உடல் இருள்.

ஆனால் ஆழ்ந்த பள்ளத்தாக்கிலும், ஒரு முணுமுணுப்பு இருந்தது: “நன்றி, பிதா.”

இந்த சொர்க்கத்திற்கான கடிதங்கள் வெற்றியில் எழுதப்படவில்லை, ஆனால் நடுங்கும் நம்பிக்கையில்— மூலமானவை, பளபளப்பற்றவை, சிங்காசனத்திற்கு முன் நேர்மையானவை.

இப்போது, பிதாவின் இரக்கத்தால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், பரிசுத்த ஆவியின் தீயால், இந்த தனிப்பட்ட அழுகைகள் பொது ஒளியாக வெளியிடப்படுகின்றன— நிழல்களில் பயணிக்கும் எந்த சக பயணியும் பாதையில் தோழமையைக் காணட்டும், மிக இருண்ட மணிநேரத்திற்குப் பின்னர் எப்போதும் வரும் விடியலைப் பார்க்கட்டும்.

இந்த பக்கங்களைத் திறக்கும் ஒவ்வொரு வாசகனும் எழுத்தாளரைத் தாங்கிய அதே மென்மையான குரலைச் செவிமடுக்கட்டும்: “நீ தனியாக இல்லை. நான் ஒவ்வொரு ஜெபத்தையும் கேட்டேன். காலை வருகிறது.”

ஒரே கடவுளின் மகிமைக்காக— பிதா, மகன், பரிசுத்த ஆவி— அவருடைய சரியான ஒருமை என் நள்ளிரவை பாடலாக மாற்றியது.

ஆமென்.

16-11-09

என் இராஜனே என் தேவனே என் மேல் மனதுருக்கமாய் இருப்பவரே
உம்முடைய நாமத்தை இன்றைய வேளையில் உயர்த்துகின்றேன்.
தாழ்மையில் உள்ளோரை நினைத்து அவர்களை உயர்த்தி வைப்பவரே
உம்முடைய மகிமைக்காக, எல்லாவிதத்திலேயும் உம்மை கனப்படுத்துகிறேன்.
என் ஆத்துமா தாகமாக இருக்கிறது. என் பாத்திரம் வெறிதாகிறது.
என் தேவன் அதை உம்முடைய அபிஷேகத்தினால் நிரப்புகின்றீர்
என் பாத்திரம் நிரம்பி வழிந்தோடவும் செய்கின்றீர்.
உம்முடைய வல்லமையான கரங்களில் என்னைத் தாங்கி நிறுத்தியுள்ளீர்
நீரே நான் கண்ட எல்லாவற்றிலும் சிறந்த மெய்ப்பொருளானீர்
ராஜாதி இராஜாவாக சிங்காசனத்தில் வீற்றிருப்பவரும் நீரே
இவ்வுலகின் சனத்தின் எல்லா முறுமுறுப்புகளையும் கேட்டுக்கொண்டிருக்கிறீர்
உம்மை விட்டு தூரமான விலகிப்போனவர்கள் எத்தனையோ பேர்கள்,
அவர்கள் யாதொரு தீமை உம்மிடத்தில் கண்டுபிடிக்கக் கூடுமோ?!.
என் தேவன் நன்மை செய்கிறவராகவே இருக்கின்றார்.
இருளைவிட்டு வெளிச்சத்திற்கு வர தம்முடைய ஒரே பேறான குமாரனையும் தந்தார்
நம்முடைய பாவங்களை மன்னிக்கத்தக்க கர்த்தத்துவம் அவரிடத்திலிருக்கிறது.
அவருடைய காயங்களால் நானும் என் வீட்டாரும் சுகமடைந்தோம்.
இந்த உலகமும் அவருடைய தழும்புகளால் சுகமடைந்திருக்கிறது.
இருளே இவ்வுலகத்தை விட்டு அகன்று போய்விடு.
என் தேவன் ஆட்சி செய்யும் காலம் நெருங்கி விட்டது.
உனக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கும் காலம் சமீபமாயிருக்கிறது.
அவர் சாத்தானின் சகல வல்லமையையும் அகற்றி ஜெயம் பெற்றார்.
அவருக்கு முன் அதன் ஆதிக்கம் ஒருபோதும் செல்லுபடியாகாது.
அவர் எல்லாருடைய கஷ்டங்களையும், உபத்திரவங்களையும் நீக்குவார்
அவரே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்.
அவருக்குள் அவருடைய பிள்ளைகள் பாதுகாப்பாய் இருக்கின்றனர்.
இறைவா உமக்கே என்னுடைய ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கின்றேன்.
நீர் சகலவற்றையும் செய்ய வல்லவராக இருக்கின்றீர்
உம்முடைய வாசஸ்தலங்களில் எத்தனை இன்பமாக இருக்கின்றீர்
உம்முடைய பிள்ளைகளில் மேல் எத்தனை பிரியமாக இருக்கின்றீர்
ஆனால் இன்னும் இந்த ஜனங்கள் உம்மை அறியாதிருக்கிறார்கள்.
இறைவா என் மனக்கண்களை திறந்ததைப்போல
இவ்வுலக ஜனங்களின் ஒவ்வொருவரின் மனக்கண்களையும் திறந்திடும்.
பிசாசானவன் கர்ச்சித்து சிங்கம் போல அலைகிறான்.
இறைவா இன்னும் ஒருவிசை இவ்வுலகின் மேல் மனமிரங்கிடும்.
எல்லா துதியும் கனமும் மகிமையும் உமக்கே செலுத்துகிறோம். ஆமென்.

17-11-2009

என் கண்மணியே என் சத்திய தேவனே உம் நாமம் மகிமைப்படுத்தப்படுவதாக.
நீர் சேனைகளின் இராஜா. லீலி புஷ்பம். சாரோனின் ரோஜா.
பதினாயிரங்களில் சிறந்தவர். உம்முடைய நாமம் யெகோவா.
எங்குமுள்ள தோகைகளையும் கூட்டி செய்பவராக இருப்பவர் நீங்கதானே!
சர்வ வல்லமையோடே வானத்தையும் அதிலுள்ளவற்றையும் படைத்தவர் நீரே!
தாகத்தோடே காத்திருக்கும் பிள்ளைகளுக்கு மன்னாவையும் சேர்த்து அருள்பவரே!
உம்முடைய தூய வழிகளை நான் சிந்தித்து அக மகிழ்கின்றேன்.
உம்முடைய பாதத்தில் நான் அமர்ந்து உமக்கு பிரியமானவிதமாய் நடப்பேன்
என் தாழ்மையில் என்னை நீர் நினைத்தீர். நான் அதை மறவேன்.
என் தனிமையில் என்னோடு கூடவே இருந்தீர். உம்மை மறவேன்.
எனக்கு எல்லாவிதமான ஆலோசனைகளையும் தந்து வழிநடத்தினீர்.
உம்முடைய வாசஸ்தலத்தில் நான் அனுதினமும் பிரவேசித்து உம்மை வாழ்த்துவேன்
உம்முடைய பரிசுத்தம் மகாபெரிய பரிசுத்தம்.
என் இயேசு எனக்காக மரித்தார். நான் பரிசுத்தமடைய வேண்டி உயிர்த்தார்.
இது என்னில் பழையன கழிந்தன. புதியன உருவாகின.
உம்முடைய நாமத்தினால் நான் எல்லாவற்றையும் ஜெயம் கொள்பவனானேன்.
நீரென்தன் அடைக்கலமும், என் கோட்டையும் நான் நம்பும் அரணுமானவர்.
என்னை புல்லுள்ள இடங்களில் மேய்ப்பவரும் நீரானவர் தானே.
இராஜாதி இராஜா, தேவாதி தேவா கருணைக்கடலும் நீரே.
உம்முடைய அன்பினாலே உம்மை நான் நேசித்து மிகவும் அன்பு கூருவேன்.
ஆண்டவரே, நீர் அருள்வராய் பெரிய காரியங்களை செய்கின்றீர்.
நீரொருவரே என்னை நேசிக்கிறவராய் என்னுடன் கூடவே இருக்கின்றீர்.
ஆண்டவரே உம்மை நான் ஆராதிக்கின்றேன். போற்றுகிறேன்.
என் சிந்தனைகளில் ஒரு அபிஷேகத்தை தந்திடுமைய்யா!
ஆரோனின் தலையில் ஊற்றப்பட்ட நறுமணம் தாடியிலே வழிந்தது.
பேதுருவின் அபிஷேகம் அவனுடைய நிழலில் கூட வழிந்தோடியது.
அதுபோல என் தலையில் ஊற்றப்பட்ட இந்த அபிஷேகத் தைலமானது
என்னை முழுவதும் நனைத்து, என் நிழலிலும் வழிந்தோடி,
என் எல்லைகளையும் தாண்டி ஜாதிகளையும், ஜனங்களையும்
தொட்டு, அது அவர்களையும் நனைத்து பெருகியோடச் செய்யும்.
அதனோடு கூட என் கைப்பிடியில் இருக்கும் பேனாவிலும்
உம் அபிஷேகம் பாய்ந்து நான் எழுதுவதில் அபிஷேகம் தங்கட்டும்.
இறைவா என் நேசரே என்னை மிகுதியாய் நேசிப்பவர் நீரே.
நீர் மாத்திரம் போதும். நீரே எனக்கு எந்நாளும் வேண்டும்
பரிசுத்தரே என்னை படைத்தவரே உம் நாமம் உயர்த்தப்படுவதாக.
உம்மை நான் ஆராதித்து அன்பு கூர்ந்திடுவேன். ஆமென். அல்லேலூயா.

18-11-2019

என் இயேசு நாதரே என் அன்பான தேவனே உம் நாமம் வாழ்க.
உம்முடைய இரக்கமும் இப்பூமியில் இறங்கி வருவதாக.
உம்முடைய சித்தம் பரலோகம் போல பூமியில் நிறைவேறுவதாக.
இறைவா இறைவா நீர் மகிமையின் தேவன் நீர் போற்றப்படுவீராக.
உமக்கு சாட்சியாக வாழ எனக்கு கிடைத்திருக்கும் பாக்கியத்திற்காக நன்றி.
உம்முடைய நாமத்தை நான் தெரிந்துகொள்ள எனக்கு கற்றுக்கொடுத்ததற்காக நன்றி
மகிமையே, உம்முடைய சிங்காசனத்திலிருந்து என்னை காக்கின்றீர்.
தேவதூதர்கள் புடை சூழ பரிசுத்த தேவர்களின் மத்தியில் அமர்ந்துள்ளீர்.
வல்லமையோடு உம்முடைய செங்கோலால் அண்டத்தை நிர்வகித்து
உம்முடைய அக்கினியால் தீமைகளை சுட்டெரிக்கின்றீர்.
இறைவா என் தேவனே. இயேசுவே என் இரட்சகரே! ஆமென்.
உம்முடைய கரங்களில் நான் அடைக்கலமாய் இருக்கின்றேன்.
உம்முடைய ஆலயங்களில் நான் தங்கியிருக்கவே விரும்புகிறேன்.
உம்முடைய இரக்கம் என்னை சூழ்ந்திருப்பதற்காக நன்றி.
எல்லா நிலையிலும் நீர் என்னை காத்து வந்ததற்காக நன்றி.
இறைவா உம்முடைய சத்தியத்தை நான் தியானிக்கின்றேன்.
அதிசயமான அதிசயங்களை நான் எண்ணி ஆனந்தம் கொள்கின்றேன்.
நீரே என்னுடைய பாதுகாப்பும் அரணுமாயிருக்கின்றீர்.
என்னுடைய நேரத்தை யாவும் உமக்கே கொடுக்க விரும்புகிறேன்.
அதை நீரே ஏற்று பரிசுத்தமாக்கி ஆசீர்வதிக்க வேண்டிக்கொள்கின்றேன்.
ஆராதனைக்குரியவர் நீர்தானே என் அன்பும் உயிரும் நீரே.
இறைவா, என்னை எப்பொழுதும் உம்முடைய சத்தியத்தின் வழி நடத்திடும்.
உம்முடைய வார்த்தைகளின் அதிசயங்களை வெளிப்படுத்தும்.
இன்றும் என்றும் உம்மை நெருங்கி வர எனக்கு உதவி செய்யும்.
ஆராதனைக்குரியவர் நீரே. நீரே எனக்கு போதுமானவர்.
உம்மிடம் எப்பொழுதும் நன்மைகளே உள்ளன.
உம்முடைய பரிபூரண மகிமை நீர் என்னை சூழ்ந்துகொண்டதற்காக நன்றி.
இறைவா உம்முடைய பரிசுத்த ஆவியை விட்டு விலகாதிருக்கட்டும்.
என் கண்கள் இருளாய் இருக்கின்றதோ? நீர் வெளிப்படும்.
என் இதயத்தில் உம்முடைய அன்பை வெளிக்காட்டிடும்,
நீர் பேசினால் ஒவ்வொருவரும் அவர்கள் இதயம் இளகாதோ!
நீர் தொடாவிட்டால் அவர்கள் உணர்வடைய மாட்டார்களோ!!
என் இறைவனே என் தேவனே நீர் என்னுடைய வார்த்தைகளை கேட்கின்றீர்
உம்முடைய இரக்கத்தில் என் ஆண்டுகளை நீர் மறைத்துக்கொள்ளும்
நீரே என்னை தேவனுடைய காரியங்கள் அறிந்துக்கொண்டிடும்.
ஜாதி, இனம், மதம் எல்லாம் உம்மோடுதான் இருக்கின்றேன். ஆமென்.

19-11-09

அன்பே என் ஆண்டவரே உம்மை நான் ஆராதிக்கின்றேன்.
உம்முடைய அன்பை இவ்வுலகிற்கு நான் சொல்லுகிறேன்.
இறைவா நீரே என் தஞ்சமும் என் அடைக்கலமும் என் கோட்டையும்.
நான் உம்மைத் தேடுவேன் என் வாழ்நாளெல்லாம்.
என் எல்லாவற்றிலும் உம்மை நான் நேசிப்பேன்.
உம்மையே நான் நேசிப்பேன். பின்திரும்ப மாட்டேன்.
உம்முடைய சந்நிதியில் நான் அமர்ந்து உம்மை பாடுவேன்.
உம்முடைய சத்தியத்தின்படி நான் நடந்து மகிழ்ந்திடுவேன்.
ஆராதனைக்குரியவர் நீரே என் ஆத்தும நேசரும் நீரேயாவரே.
தேவா என் சர்வ சிருஷ்டிகரே உம்மை நான் பாடி புகழ்ந்திடுவேன்.
என் கிருபையின் இராஜா என் ஆத்தும மணவாளரே
உம்மையன்றி எனக்கு வேறு யார் துணையுண்டு.
நீரே என் அடைக்கலமும், கோட்டையும், துருகமுமானவே!!
இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தர் நீரே என் ஆத்தும நேசர்.
எல்லையில்லா கிருபைகளால் என்னை நீர் நிரப்புகிறீர்.
கழுகைப்போல செட்டைகளை விரித்து என்னை பாதுகாக்க செய்கின்றீர்
என் வெறுமைகளையெல்லாம் மாற்றி புதுபெலனால் நிரப்புகின்றீர்.
என் ஆவியை உற்சாகப்படுத்துகின்றீர். தேற்றி நடத்துகிறீர்
நான் போகும்போதும், வரும்போதும் என்னோடு கூட இருக்கின்றீர்
எனக்கு முன்பாக தூதர்களை அனுப்பி கோணலானவைகளை
செம்மையாக்கி அதன் வழியே என்னை நடத்துகின்றீர்.
உம்முடைய நாமத்தின் நிமித்தம் நாள்தோறும் தேற்றிப் பலப்படுத்துகின்றீர்.
என் குடும்பங்களை, என் ஜனங்களை நீர் பாதுகாக்கின்றீர்.
இறைவா நீரே தகப்பனாகவும், தந்தையாகவும் இருக்கின்றீர்.
இரட்சகர் நீரே, என் இரட்சிப்பும் நீர் மாத்திரமே.
ஆராதனைக்குரியவர் நீரே, நீர் மாத்திரம் பெரியவராயிருக்கின்றீர்
ஆண்டவரே என் ஆத்தும நேசரே உம்மை போற்றுகிறேன்.
என் அன்பானவரே, அதிசயமே அப்பா பிதாவே
உம்முடைய எண்ணி முடியாத அதிசயங்களுக்காக நன்றி சொல்லுகிறேன்
என் இன்பமும், என் துணையும் என் பெலனுமாயிருக்கின்றீர்.
தேவா உம்முடைய எல்லாவற்றிற்காகவும் நான் நன்றி சொல்லுகிறேன்
இறைவா உம்மை நான் உயர்த்தி மகிழ்ந்திடுவேன்.
அற்புதமும் என் அதிசயமும் நீரே. நீர் மாத்திரம் போதுமெனக்கு
உம்முடைய கிருபையால் நான் நிலைநிற்கின்றேன்.
உம்முடைய தயவினால் நான் வாழ்கின்றேன்.
துதி, கனம், மகிமை யாவும் உமக்கே உரித்தாகுக! ஆமென் அல்லேலூயா.

21-11-2009

இயேசுவே நீர் ஆண்டவர். மரித்து உயிர்த்தெழுந்தீர்.
மரணத்தை ஜெயித்தீர். பிசாசின் தலையை நசுக்கினீர்.
உந்தன் நாமத்தையே நான் உயர்த்தி போற்றிடுவேன்.
இராஜாதி இராஜாவே மகிமை நிறைந்தவராம் என் இயேசுவே.
நீர் அற்புதர், அதிசயர் ஆலோசனை கர்த்தர்.
நீதியின் சூரியன் கொண்டு இவ்வுலகை நியாயம் தீர்ப்பவரே!
உம்மை என் இருதயத்தின் ஆழத்திலிருந்து போற்றி பாடுவேன்.
என் மகிமை மாட்சிமை நிறைந்தவரே நீர் வாழ்க வாழ்கவென்பேன்.
தூயவர் நீர். துதிகளில் மகிழ்வோரும் நீரொருவரே!
வல்லமையின் தேவன் நீரே. பிதாவின் வார்த்தையுமானீரே!
தேவா உம்முடைய எல்லா நற்கிரியைகளுக்காக ஸ்தோத்திரம்.
உம்மை தினமும் புகழ்ந்து பாடுவது எவ்வளவு நல்லதாயிருக்கிறது.
உம்முடைய சகல நற்கிரியைகளுக்காக ஸ்தோத்திரம்.
அன்பரே ஆசையரே நீரொருவரே சர்வ வல்லவராக இருக்கின்றீர்.
இரவும் பகலும் உம்முடைய வேதத்தை தியானிக்கும் மனிதன் பாக்கியவான்.
இறைவா என்னையும் அவ்வண்ணம் மாற்றிடீராக.
உம்முடைய நாமத்தை அறிந்து மேன்மை பாராட்ட எனக்கு கிருபை செய்யும்.
உம்முடைய நீதியையும், நாமத்தையும் அறிந்தே நான் மேன்மை பாராட்ட வேண்டும்.
இவ்வுலகமும், அதன் பொருளும் எனக்கொரு பொருட்டல்ல.
நீரும், உம்முடைய இராஜ்யமுமே எனக்கு மிக மிக முக்கியம்.
ஆராதனைக்குரியவர் என்னை தினந்தோறும் வழிநடத்துபவர்.
நீரின்றி எனக்கு யாருண்டு? என்னோடு கூடவே இருக்கின்றீர்.
உம்முடைய மகிமையின் சிங்காசனத்திலிருந்து என்னை கண்ணோக்குகின்றீர்
உம்முடைய கண்கள் இப்பூமி முழுவதும் உலாவி கொண்டிருக்கின்றன.
மெய்யான தேவனைத் தேடும் மனிதர்கள் சிலரே இவ்வுலகில்.
இராஜா அதில் நானும் இருப்பது உம்முடைய கிருபையால் தானே.
நன்றி சொல்லி சொல்லி உம்மை உயர்த்திடுவேன்.
நல்லவரே, நன்மைகளை செய்பவரே உம் நாமம் வாழ்க.
உம்முடைய சித்தம் இப்பூமியில் நிறைவேறுவதாக.
பெரிய காரியங்களை செய்கின்றீர். சர்வ வல்லவரும் நீரே.
உம்மைத்தவிர எனக்கு திராணியை செய்பவருண்டு. பொக்கிஷமுண்டு.
வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்த உம்மைத்தவிர யாரை ஆராதிப்பேனோ?
ஆராதனை செய்கின்றோம். அன்பே என் அருமையாரே!
என்னை மீண்டும் தேடிவந்த பிதாவே நீர் வாழ்க.
உம்முடைய அன்பு எல்லாருடைய அன்பிலும் உயர்ந்தது சிறந்தது.
நன்றி சொல்லி உம்மை ஆராதிப்பேன். ஆமென். அல்லேலூயா.

22-11-2009

என் இயேசு ராஜாவுக்கே எந்நாளும் ஸ்தோத்திரம் செலுத்திடுவேன்.
நீதிபரர் அவருக்குள் நான் நீதிமானாக பரிசுத்தம் செய்திடுவார்.
சேனைகளின் தேவனவர், மகிமையின் கர்த்தரவர், சத்தியமானவர்.
உம்மை துதிப்பாடி போற்றி மகிழ்ந்து ஆராதித்திடுவேன்.
அவருடைய நாமத்தை உயர்த்தி ஆனந்த களிப்படைவேன்.
சர்வ சிருஷ்டிக்கும் எஜமானர் நீரே, உம்மை கனப்படுத்துகிறேன்.
பகைவரையும் நேசிக்க சொன்ன என் பரம பிதாவே
உம்முடைய அன்பை தியானிக்கையில் என் கண்கள் கலங்குகின்றதே!
ஒரே பேரான குமாரனென்றும் பாராமல் எங்களுக்காக தந்தருளினீர்
இடறுதலுக்கான கல்லை சீயோனிலே வைத்தீர்.
உம்முடைய சித்தத்தை நிறைவேற்ற நீர் திருவுளம் பற்றினீர்.
நீரே எந்தன் கன்மலையும், என் கோட்டையும், என் அடைக்கலமுமானீர்.
என் இராஜாவே நீரே என் தகப்பனாகவும், நண்பனாகவும்
கூடவே இருக்கின்றவராகவும் இருக்கின்றீர். நன்றி.
நன்மை, தீமையை அறிந்திருக்க கிருபை செய்தீர்.
தீமையை விட்டு வெளியேற எனக்கு உதவி செய்தீர்.
அக்கிரமம், துன்மார்க்கம் இவைகளை என்னை விட்டு அகற்றினீர்
என் பாவங்களையும், சாபங்களையும் நீர் சிலுவையில் சுமந்து தீர்த்தீர்
இரட்சகர் உம்மை நான் தொழுதுக்கொள்வேன்.
மீட்பரே உம்மை நான் ஆராதித்து அகமகிழ்வேன்.
என் நேசர், என் இராஜா என் பெலனும் கீதமுமானவர் நீரே
உம்முடைய நித்திய வல்லமைகளுக்காக உம்மை உரிமை பாராட்டுகின்றேன்
உம்முடைய நாமத்தினாலே என்னை நீர் பாதுகாத்தீர்.
உம்முடைய அக்கினியின் நிழலிலே இளைப்பாறச் செய்தீர்.
பனிப்போல என்மீது உம் ஆவியை ஊற்றப் பண்ணினீர்.
பாத்திரம் எண்ணெய்யால் நிரம்பி வழியச் செய்தீர்.
பரிசுத்த ஆவியை எனக்கு அச்சாரமாக போட்டீரே
தேற்றரவாளன் என்னை உம்முடைய சத்தியத்தின் படி நடத்துகின்றார்.
அன்பே சேனைகளின் தேவனே நீர் வாழ்கவென வாழ்த்துவேன்.
சத்தியரே நீரே சர்வலோகத்தையும் ஆள்பவரும் நீர்தானே.
உம்முடைய கையில் என்னை தந்துவிட்டேன்
எடுத்திடும், வனைந்திடும், புதிய படைப்பாக்கிடும்.
உம் தூய வழிகளில் நான் நடக்க என்னை பரிசுத்தமாக்கிடும்
என் ஜீவனை நான் உமக்கே பலியாக்கினேன்.
நீரே எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளும்.
உம்முடைய நீதியும், கிருபையும் விளங்குவதாக. ஆமென்.

23-11-2009

என் இயேசு கிறிஸ்துவின் அன்பு ஒருபோதும் மாறாதது.
அவருடைய அன்பே நம்மை பிதாவினிடத்தில் சேர்க்கவல்லது.
என் அக்கிரமங்களுக்காக அவர் அடிகள் பட்டார்.
என் பாவங்களுக்காக அவர் பரிகாசம் செய்யப்பட்டு சாபமானார்.
என் நோய்கள் நீங்க அவர் நீங்காத காயங்கள் பெற்றார்
என் சாபங்கள் மாற அவர் முள்முடி கொண்டார்.
அவருடைய தழும்புகளால் நான் சுகமானேன்.
இவ்வுலகத்தின் பாவங்களை சுமந்து தீர்த்த ஆட்டுக்குட்டி.
சேனைகளின் தேவன். பிதாவின் சித்தத்தை செய்து முடித்தவர்.
எங்களோடே புதிய உடன்படிக்கை செய்த மத்தியஸ்தர்.
அவர் சிலுவையில் அறையப்பட்டு மரித்தார்.
மூன்றாம் நாளில் இயேசு உயிர்த்தெழுந்தார்.
வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறவர் அவர் ஒருவரே.
இவ்வுலகின் வெளிச்சமும் அவர் ஒருவரே.
இராஜாவே உம்முடைய நாமத்தை உயர்த்தி மகிழ்ந்திடுவேன்
இரவும், பகலும் உம்மை நினைத்திருப்பது என் பாக்கியமே.
ஆராதனைக்குரியவர் அவரே, அகிலம் முழுமைக்கும் சொந்தக்காரரே.
இறைவா என் பிரியமும், என் சுந்தரரூபமானவரே
உம்முடைய வேதத்தில் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.
உம்முடைய கட்டளை, கற்பனைகளில் நான் விருப்பமாயிருக்கிறேன்
என் வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதல்களை கொண்டு வந்தவரே
உமக்கே நான் ஆராதனையை செலுத்துவேன்.
உம்முடைய ஆலயத்தில் வந்து உம்மை தொழுதுகொள்வேன்.
நீரும் மகிமையாய் என்னிடத்தில் இறங்கி வருவீர்.
உம்முடைய வெளிச்சம் என் முகத்தில் பிரகாசிக்கும்
உம்முடைய சத்தம் என் காதுகளில் கேட்கும்.
என் உடல் உம்முடைய அக்கினியால் சுடர் விடும்.
ஜீவ தண்ணீர் என்னிலிருந்து புறப்பட்டு ஓடும்.
அது இவ்வுலக எல்லையெங்கிலும் பாய்ந்தோடும்.
எல்லோர் வாழ்விலும் அது மிகப்பெரிய மாற்றத்தை கொண்டுவரும்
இவ்வுலக ஜனங்கள் உமக்காக களித்திடுவார்கள்.
பிதாவே உம்முடைய சித்தத்தை செய்வார்கள்.
இராஜாதி இராஜா, தேவாதி தேவா நீர் பெரியவர்.
உம்முடைய கிருபையே என்னை தாங்குகிறது.
உம்முடைய நாமம் எனக்கு மிகப்பெரிய அடைக்கலம்.
நீர் பரிசுத்தர். உம் நாமம் பரிசுத்தம். ஆமென். அல்லேலூயா.

24-11-2009

சர்வ வல்லவரே, சர்வ சிருஷ்டிகரே என் காரியங்களை உம்மிடம் ஒப்படைத்தேன்
என் வாழ்க்கையில் எல்லாமுமாயிருந்தீர் இதுவரையில்.
இனிமேலும் என் வாழ்க்கையை உமது சித்தத்தின்படி நடத்தி செல்வீர்.
என் இராஜா, என் தேவன் கிருபையும், சத்தியமுமானவர் நீரே.
நினைத்து பார்க்க முடியாத அதிசயங்களை, அற்புதங்களை செய்பவர் நீரே.
உம்மை நான் ஆராதித்து துதித்து அக மகிழ்ந்து போற்றிடுவேன்.
என் இருதயம் பாரமாக இருக்கின்றது.
இறைவா அதை லேசானதாக மாற்றிடும்.
உம்முடைய அக்கினி கோட்டைக்குள்ளாக என்னை காத்துக்கொள்ளும்.
என் இராஜா நீரே. என் மகிமையும் கீதமுமானவர் நீர் மாத்திரமே.
உலகம் எனக்கு எதிரியாக எப்பொழுது இருந்தாலும்
நீரென்னை தைரியப்படுத்தி, உற்சாகப்படுத்தி வழி நடத்துவீர்.
என்னை காக்கின்ற தேவன் நீரென்னோடு இருக்கின்றீர்.
நான் எதற்குமே அஞ்சேன். இருள் என்னை மேற்கொள்வதில்லை.
இவ்வுலகத்திற்கு வெளிச்சமாக, உப்பாக நான் மாறிடுவேன்.
என் திருமண காரியங்களை உம் கைகளில் ஒப்புக்கொடுக்கிறேன்.
கர்த்தரே அற்புதங்களை செய்திடும். அதிசயங்களை செய்திடும்.
இனி நான் பெலனில்லாதவன். உம்முடைய வேளை வந்தது.
நீர் சிங்காசனத்திலிருந்து எழுந்து எனக்கு உதவி செய்வீர்
நான் எல்லா தடைகளையும் கடந்து வெற்றி பெற்றவனாகிடுவேன்.
இதில் எந்தவொரு இடறோ, தப்போ ஏற்படாத வண்ணம் பாதுகாத்திடும்.
தேவனே உம்முடைய நன்மைகளைப் பெற காத்திருக்கின்றேன்.
பரலோகத்திலிருந்து நீரெனக்கு ஆசீர்வாதங்களை தரப்போகின்றீர்.
நான் அதைப்பெற்றுக்கொண்டு உமக்கு நன்றியுள்ளவனாக இருப்பேன்.
சிருஷ்டிகரே என் இயேசு மணவாளனே நான் இதோ.
உமக்கு நலமானதை செய்யும். நான் உமது அடியவன். நண்பனும் கூட.
உமக்கு விருப்பமானதை செய்யும். அடியவன் இதோ?!
உமக்கு பிரியமானதை செய்யும். அடியவன் இதோ?!
எங்களுக்கு பல வழிகளில் நீர் திறந்த வாசலை வைத்திருக்கின்றீர்.
ஆண்டவரே உம்முடைய சித்தமென்றே நடைபெறட்டும்.
இறைவா, எனக்கு மனைவியாக வரப்போகிற உம் பிள்ளையை
உம்முடைய அக்கினி கோட்டைக்குள்ளே மறைத்துக்கொள்ளும்.
இருதயத்தில் பாரங்கள் யாவற்றையும் லேசாக்கிடும்.
தைரியத்தின், பெலத்தின் ஆவியாலே நிரப்பிடும்.
சமாதான இருதயத்தை தந்து, சோர்வை அவளை விட்டகற்றும்.
துதி, கனம் மகிமை யாவற்றையும் உமக்கே படைக்கின்றேன். ஆமென்.

25-11-2009

★

தேவா உம்முடைய பிரசன்னத்தில் எவ்வளவு இன்பமாயிருக்கிறது.
நீரே என் துருகமும், அடைக்கலமும், கோட்டையுமாயிருக்கின்றீர்.
உம்முடைய அக்கினியால் நான் தினந்தோறும் பரிசுத்தமாக்கப்பட்டு வருகிறேன்.
உலகமெல்லாம் சுற்றி உம்முடைய நாமத்தை பிரஸ்தாபப் படுத்துவேன்.
இறைவா, இவ்வுலகின் ஆத்துமாக்களை உமக்காக அறுவடை செய்ய உதவி செய்யும்.
ஒரு ஆத்துமாவும் வீணாக போய்விடக் கூடாது.
அநேக ஊழியர்களை உமக்காக அதிகமாக ஏற்படுத்தும்.
வல்லமையாக செய்ய அவர்களுக்கு கிருபை செய்யும்.
இறைவா உம் தூய வழியில் நான் என் குடும்பமும் நடக்கணும்.
அதுபோல என் தேசமும் உம்மை நேசிக்கிறவர்களாக மாறிவிடட்டும்.
ஆண்டவரே, தேவனே உம்மாலே கூடாத காரியங்கள் ஒன்றுமில்லை.
என் வாழ்வில் நான் இயேசுவுக்காக பயன்பட வேண்டும்.
என் வழியில் நான் இயேசுவுக்காக நடக்க வேண்டும்
இறைவா, ஞானம் போதாமையால் நான் பிதற்றுகின்றேன்.
எனக்கு போதிய ஞானத்தை தந்தருளும். நீதியை உணர்த்திடும்.
கிருபையும், சமாதானமும் இவ்வுலகில் தங்கட்டும்.
இவ்வுலகம் உம்மை தேடுகின்ற உள்ளத்தோடு தேடட்டும்.
பக்தியுள்ளவனை தேவன் கண்ணோக்கி பார்க்கின்றீர்.
உம்மை அவன் உயர்த்தும் போது அவனை நீர் தூக்கிக் கொள்வீர்
எல்லாம் வல்லவரே, என் ஆத்துமாவை நேசிக்கின்றவரே,
நீரே என்னை நேசிக்கின்றவராக இருக்கின்றீர்.
உம்முடைய கிருபையை என்னை பிரிக்கத்தக்கவன் யார் ?!
இறைவா, நான் அனலாய் இருக்க ஆசைப்படுகிறேன்.
உமக்காக எரிந்து பிரகாசிக்கிற சுடரொளியாய் மாற வேண்டும்
இவ்வுலகம் அதன் வெளிச்சத்தில் உம்மை மகிமை செய்ய வேண்டும்
உம்முடைய பிரசன்னம் போதும். உம்முடைய அன்பு போதும்.
ஆனால் அவையெல்லாவற்றிலும் பிரிவு அடையாதே.
ஆண்டவரே என்னை இன்னும் ஒரு படி மேலே அழைத்துச் செல்லும்.
நான் காத்திருக்கின்றேன். உமக்காக வேண்டி நிற்கின்றேன்.
ஆராதனைக்குரியவர் நீரே, உம்மை வாழ்த்துகிறேன்.
நீர் ஆசீர்வதிக்கப்பட்டவர். உம்மை உயர்த்துகின்றேன்.
மகிமையும், மாட்சிமையும், வல்லமையும் உமக்கே சொந்தம்.
நீர் நீதியின் சூரியனை கொண்டிருக்கின்றீர்.
தேவர்களுக்கெல்லாம் தேவனாகவும் இருக்கின்றீர்.
நீரே வழியும், சத்தியமும், ஜீவனுமானீர்.
அல்லேலூயா. ஆராதனை. உம் நாமம் வாழ்க. ஆமென்.

26-11-09

தேவனே என் இராஜனே உம் பாதம் நான் பணிந்தேன்.
உம்முடைய கிருபையால் நான் இரட்சிக்கப்பட்டேன்.
உம் தூய வாழ்க்கையை நான் கண்டு அதிசயித்தேன்.
சர்வ வல்லவரே, சகலமும் படைத்தவரே உம்மை போற்றுகிறேன்.
ஆராதனைக்குரியவர், அகிலமும் படைத்தவர் உம்மையே வாழ்த்துகிறேன்.
உம்மையே நான் நேசிக்கின்றேன். உம்மையே நான் விரும்புகிறேன்.
உம்முடைய கரங்களில் அடியேன் உள்ளேன்.
உம்முடைய சித்தம் போல அடியேனை நடத்திடும்.
அப்பா தகப்பனே உம்மை நான் உயர்த்துகிறேன்.
எல்லாம் வல்லவரே, சர்வ சிருஷ்டிகரே உந்தன் நாமம் உயர்த்திடுவேன்.
உலகம் உம்மை வெறுத்திடலாம். உம்மால் என்னையும் வெறுக்கலாம்.
ஆனாலும் இவ்வுலகத்தை நீர் ஜெயித்தீர். உம்மில் நானும் பெலனடைந்தேன்.
உம்மை அறிகின்ற, பைத்தியமாக இருக்கின்ற நான்
எந்த ஏச்சு, பேச்சுகளுக்கும் பயந்து ஓடி விட மாட்டேன்.
உம்மை பிடித்துக் கொண்டேன். இனி ஒருபோதும் விடப்போவதில்லை.
உம்முடைய இராஜ்யத்தை நான் பலவந்தம் செய்கின்றேன்.
உம்முடைய இராஜ்யத்தின் பொக்கிஷங்களை நான் பெற்றுக்கொள்வேன்.
உம்முடைய இராஜ்யத்தின் சமாதானத்தோடு நான் வாழ்ந்திடுவேன்.
உமக்கு பிரியமானவனாக நான் வாழ்ந்து ஜெயித்திடுவேன்.
கிருபையுள்ளவரே, நித்திய வல்லவரே உம் நாமத்தை உயர்த்துகிறேன்
உலகம் என்னை வஞ்சிக்கிறது. மாம்சமும் என்னை சிதைக்கிறது.
ஆத்மா உம்மையே ஏங்கி தவிக்கின்றது.
மான்கள் நீரோடை வாஞ்சிப்பது போல என் ஆத்துமாவும் வாஞ்சிக்கிறது.
நீர் மாத்திரம் எந்தன் ஆத்தும நேசரே என்பேன். நீர் போதும்.
என்னை என்றும் விரும்புகிற நீர் என் தேவனாக இருக்கின்றீர்
உந்தன் நாமத்தை நான் போற்றிப் புகழ்ந்து பாடி மகிழ்ந்திடுவேன்.
இராஜாதி இராஜா தேவாதி தேவா உம்மைப் போல மாறிடுவேன்.
இறைவா, உம்முடைய நீதியையே நான் தேடுகின்றேன்.
என் நேரத்தை உமக்கே கொடுத்துவிட்டேன்.
உம்முடைய சேவை என் வாழ்வினில் ஓங்கட்டுமே.
இராஜா இரட்சகரே உம்மை போற்றிப்பாடுவேன்.
உம்மையே புகழ்ந்து துதித்து அக மகிழ்வேன்.
உம்மை நான் கொண்டாடி மகிழ்வேன். மகிழ்ந்து துதிப்பேன்.
என்றென்றும் உம்மை நான் போற்றிப் போற்றி தொழுதுக்கொள்வேன்.
உம்முடைய சுவிசேஷத்தை என் வாயால் நான் ஏந்திச்செல்வேன்.
அல்லேலூயா உம்மைப்பாடி ஆராதனை செய்திடுவேன். ஆமென்.

27-11-09

எம்மேல் கிருபையாய் இருக்கின்ற என் தேவனே. நீர் வாழ்க.
உம்முடைய தரிசனத்திற்காக காத்து கிடக்கின்ற அடியேன் இதோ!
நீர் என்னுடைய திருமணத்திற்கு வரும்படி மன்றாடி கேட்கிறேன்
பிதாவும், குமாரனும், பரிசுத்த ஆவியானவரும் என் திருமணத்திற்கு வர வேண்டும்.
ஆபிரகாமை ஆசீர்வதித்த தேவன், ஈசாக்கை ஆசீர்வதித்த தேவன்
யாக்கோபை ஆசீர்வதித்த தேவன், என்னையும் ஆசீர்வதிப்பீர்.
என் தேவன் நீர் பெரியவராய் இருக்கின்றீர். நீர் வந்து எங்களை ஆசீர்வதியும்.
இறைவா, பொன்னையோ - பொருளையோ நம்பி நான் இருக்கவில்லை.
இயேசுவே, என் தேவனே உம்மையே நம்பி நான் இருக்கின்றேன்.
கானா ஊர் திருமணத்திற்கு நீர் சென்றீர் தானே?!
நான் இருக்கும் ஊரிலும் என் திருமணத்திற்கு நீர் வர வேண்டும்.
எல்லாவற்றையும் நீர் பார்த்துக் கொள்ளும். நீரே தான் நண்பன்.
உம்முடைய தூதர்களை அனுப்பி எல்லாவற்றையும் செவ்வையாக்கும்.
தடைகள் யாவும் நீங்கி போகட்டும். வெளிச்சம் பரவி மலரட்டும்.
இறைவா உம்மையே நான் நம்பியிருக்கின்றேன்.
உம்மையன்றி எனக்கு உதவி செய்ய இவ்வுலகில் யாருண்டு?!
இராஜாவே, நீர் என் திருமணத்திற்கு வர வேண்டும்.
சர்வ வல்லவரே என் திருமணத்திற்கு வருபவர்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டும்.
உம்முடைய கரங்களில் வல்லமையுண்டு. நீரே நடத்தி தர வேண்டும்.
உம்முடைய கரங்களில் நான் ஒப்புக்கொடுத்து விட்டேன். நீர் வாழ்க.
இதோ, என்னுடைய பயங்களை எல்லாம் என்னைவிட்டு விலக்கிவிட்டேன்.
இறைவா, உம்முடைய நாமத்தை நான் தொழுது கொள்கிறேன்,
ஆண்டவரே என் அன்பே உருவான தேவனே நீர் துதிக்கப்படத்தக்கவர்.
உம்முடைய துதியை என் வாயில் சுமந்து வருவேன்.
அதிசயங்களை செய்பவரும் நீரே. என்னை திசைநோக்கி நடத்துபவரும் நீரே.
உந்தன் நாமத்தை உயர்த்துவதையே நான் விரும்புகிறேன்.
இறைவா என் வாழ்நாள் முழுவதும் உம்மையே நேசிப்பேன்.
எதை எல்லாவற்றிலும் உம்மையே நான் நேசிப்பேன்.
என் இயேசுவே உம்மையே நான் நேசிப்பேன்.
வாழ்க நீர் உயர்த்தப்படுவீராக. உம்மையே போற்றிப்பாடுவேன்
எல்லாவற்றிற்கும் முன்பாக உம்மை கனப்படுத்துவேன்.
இறைவா அதை என் பாக்கியமாக நான் கொண்டேன்.
நீரே என் தஞ்சம். நீரே என் அடைக்கலம். நீரே என் பாக்கியம்.
உமக்குள்ளே நான் எந்நாளும் வெற்றி சிறப்பேன்
நீர் எனக்காக இவ்வுலகத்தை ஜெயித்தீர். உமக்குள்ளே நானும் ஜெயித்தேன்.
நீரே எந்நாளும் உயர்த்தப்படத்தக்கவர். ஆமென். அல்லேலூயா.

23 - 11 - 2009

தேவா உம்முடைய பிரசன்னத்தை தாரும். நான் அகமகிழ்ந்திடுவேன்.
எனக்குள் பாவமொன்றும் இராதபடிக்கு தினந்தோறும் என்னை பரிசுத்தமாக்கிடும்.
இராஜாவே என் தேவனே உம்மை நான் மகிமைப்படுத்துகின்றேன்.
உம்மையே நான் நேசிக்கின்றேன். உம்முடைய வழியில் நான் நடப்பேன்.
என் இயேசுவே உம்மை எனக்கு இன்னும் வெளிப்படுத்தும்.
தூயவராம் இயேசு மகாராஜா உம்மை துதிப்பாடுகின்றேன்.
நீர் என்னுடைய வயதையும் தாண்டி வந்துள்ளீர்.
இறைவா எனக்கு போதியும். இந்த வயதில் நான் எப்படி வாழ வேண்டும்.
அன்பரே, உம்முடைய வாலவயதில் நீர் பிதாவை தேடியிருந்தீர்.
உம்மை பிதா கனப்படுத்தியிருந்தார். நீரும் பிதாவிற்கு பிரியமுள்ள மைந்தனானீர்.
உம்முடைய அன்பு பிதாவின் அன்பு. உம்முடைய கிருபை பிதாவின் கிருபை.
உம்மில் நீர் பிதாவை வெளிப்படுத்தியிருந்தீர்.
நீரே சர்வத்திற்கும் வல்லவரான இயேசு மகாராஜா.
உம்மிலே நான் சந்தோஷமாக இருக்கின்றேன். நன்றி - நன்றி.
என்னுடைய நாட்களில் உம்மை நான் மிகுதியாக நேசிக்கின்றேன்.
தூயவரே உம்மை துதித்துப் போற்றிப்பாடி நேசிக்க காத்திருப்பேன்.
சமாதான கர்த்தரே, சகலமும் படைத்தவரே நீர் மாத்திரம் போதும்.
உம்மை நான் பிரியப்படுத்தலாமோ? என்னால் முடியாதைய்யா!!
என் இருதயத்து நினைவுகளெல்லாம் பொல்லாதவைகளாம் உள்ளதே!
நான் நினைப்பது யாவும் தீங்காகவே இருக்கின்றதே.
இறைவா, என் இருதயத்து நினைவுகளை சீர்படுத்தும்.
என் சிந்தனைகளை உமக்கு நேராக செம்மைப்படுத்தும்.
பிசாசின் எண்ண அஸ்திரங்களை வென்றிட ஆவியின் பட்டயம் தாரும்.
இதோ என் கைகளில் சாத்தானை வீழ்த்தும் ஆயுதம்.
இதோ என் நாவில் தேவனுடைய வார்த்தைகள்.
இராஜாவே, ஆலயங்களில் உம்மை போற்றிப்பாடி நடனமாடுவேன்.
ஸ்தோத்திர பலிகளை ஏறெடுத்து சமாதான பலிகளை செலுத்திடுவேன்.
உம்முடைய அக்கினியால் எனக்கு பதிலளிப்பீர்.
உம்முடைய ஆசீர்வாதங்களால் என்னை நிறைத்து விடுவீர்.
உம் தூய வெளிச்சத்தில் நான் என்றும் இளைப்பாறுவேன்.
உம் தூய பாதையில் நான் என்றும் நடந்து மகிழ்வேன்.
உம் தூய அன்பால் நான் என்றும் நனைந்து மெய் மறப்பேன்.
இறைவா என்னை நான் மறந்து போக வேண்டும்.
உம்மையே என் நினைவாக கொள்ள வேண்டும்.
உம்மையே என் ஜீவனாக ஏற்க வேண்டும்.
அல்லேலூயா துதிப்பாடி உம்மை புகழ வேண்டும். ஆமென்.

30-11-2009

எங்கள் ஏக்கம் நீரே; எங்கள் பெலனும் நீரே; நீர் போதுமெனக்கு
உம் பாதம் நான் பணிந்திடுவேன். உம் வழியில் நின்றிடுவேன்.
ஆராதனைக்குரியவர் நீரே என்னை ஆசீர்வதிப்பவரும் நீரே !!
இந்த பாவியை ஒருவிசைக்கூட மன்னியும். என் பாவங்களை கழுவிடும்.
என் மீறுதல்களை எண்ணிப்பாராதேயும். சாபங்களை போக்கிடும்.
பலவீனமாக கிடக்கின்ற என் மனதை நீர் பெலப்படுத்தும்.
சாத்தானின் வஞ்சக வார்த்தைகளில் நான் விழாதிருக்கச் செய்திடும்.
கன்மலையானவரே என் கண்ணைப் பிரபுவே நீர் வாழ்க வாழ்க.
உம் சித்தம் இப்பூமியில் என்றென்றும் நிறைவேறுவதாக.
ஆசீர்வாத மழை நீர் படைத்த இப்பூமியில் பெய்வதாக.
இராஜனே என் ஜீவனைக் காப்பவரே உம் நாமம் போற்றப்படுவதாக.
சகலதிலும் உம்முடைய நாமத்தை உயர்த்த படைத்தீர்.
நானோ பாவப்படுகுழியில் விழுந்து பாவப்பட்டதை உயர்த்தினேன்.
பெரியவர் நீர், உயர்ந்தவர் நீர் மகிமைப்படத் தக்கவர் நீரொருவரே!
இயேசு மணவாளனே, இரட்சகரே உம்மால் நான் மீட்கப்பட்டேன்.
இன்று உம்மை நான் தெரிந்துகொள்ள நீரென்னை தெரிந்துகொண்டீர்.
உம்முடைய சிநேகம் எவ்வளவு அனந்தமே! நீர் வாழ்க.
உம்முடைய நாமத்தை நாங்கள் கொண்டாடவே விரும்புகிறோம்.
ஆண்டவரே எங்களை தகுதிப்படுத்திடும். நான் ஒன்றுமில்லாதவன்.
நாங்கள் ஒன்றுமில்லாதவர்கள். நிர்வாணிகள்.
இறைவா உம்முடைய புதிய ஆடைய என்மேல உடுத்திடும்.
இரட்சிப்பின் சால்வை என்மேல் போர்த்தப்பட்டிருக்கின்றது.
நான் அவரில் ஒருநாளும் வெட்கப்பட்டு போவதில்லை.
நான் அவரில் எந்நாளும் வெற்றிபெற்றவனாக விளங்குகின்றேன்
நான் தோற்றுப் போகிறவனல்லன். நான் ஜெயிக்கப் பிறந்தவன்.
கர்த்தர் எனக்கு வெற்றியைத் தருகின்றார். நான் அதை எடுத்துக்கொள்வேன்
என் பெலவீன வேளையில் என் பெலன் நீரே !!
நான் உம்மையே நம்பியிருக்கின்றேன். நீர் பார்த்துக்கொள்வீர்.
நீர் பெரிய காரியங்களை செய்வீர். நான் நம்புகிறேன்.
எனக்கு ஒரு அதிகாரத்தையும் தந்திருக்கின்றீர்.
இதோ நான் உமது நாமத்தினால் இவ்வுலகை சுதந்தரித்துக்கொள்வேன்.
நான் எதற்கும் பயப்படப்போவதில்லை. அவரே என் நம்பிக்கை.
நான் உம்மையே நம்புவேன். என் பெலத்திலே நிற்பவனல்லவன்.
இறைவா உம்முடைய பாதத்தில் உமது ஊழியத்தை வைக்கின்றேன்.
உம்முடைய ஞானத்தால் ஊழியத்தை வழிநடத்தும்.
தைரியத்தை எனக்குத் தாரும். நீர் பெரியவர். உயர்ந்தவர். ஆமென்.

01-12-2009

அன்பே, கல்வாரி அன்பே உம்மை நான் துதித்து ஆராதித்திடுவேன்.
என்றென்றும், எவ்வேளையும் என் ஜெபமாலை நான் சொல்லுவேன்.
உம்முடைய சந்நிதியில் பக்தியோடும், நடுக்கத்தோடும் வந்து,
உம்முடைய பிரசன்னத்தில் உண்டு இளைப்பாறுவேன்.
ஆண்டவரே என் ஆத்தும நேசரே உந்தன் நாமத்தை உயர்த்திடுவேன்.
நீரில்லாத நாளெல்லாம் நாளாகுமோ? நீங்க இல்லாத வாழ்வும் அநியாயமாகிடுமோ?
இராஜாதி இராஜா, தேவாதி தேவா உம்மை நான் ஆராதித்து துதித்துப் பாடுவேன்
அப்பனே, நாதனே என் நண்பனே நீயின்றி ஒரு அணுவும் அசையாது!!
நீங்க இல்லாத இடத்தில் நான் போக விரும்பமாட்டேன்.
சர்வமும் படைத்த என் தேவா, உம்மையே நான் தொழுதுக்கொள்வேன்.
என் ஆத்துமாவை பரலோகம் சேர்க்கின்ற பாதையையே நான் தேர்ந்துக்கொள்வேன்
அவர் எனக்கு துணையாய் இருக்கின்றார். அவர் எனக்கு பாதையானார்.
அவரால் எனக்கு யாவும் சுதந்தரமாக கொடுக்கப்பட்டிருக்கின்றது.
நான் அதை எடுத்துக்கொள்வேன். யாருக்கும் அஞ்சிடேன்.
சர்வ சிருஷ்டிகரே என் தேவனே என் இராஜனே நீர் வாழ்க.
உம் நாமம் என்றென்றும் மகிமைப்படுத்தப்படுவதாக.
தேவா உம் பிரசன்னம் தாருமே! அதையே நான் வாஞ்சிக்கின்றேன்.
சத்திய தேவனே, சகலத்தையும் அறிந்திருக்கிறவரே நீர் வாழ்க.
நீரே எந்தன் மறைவிடம். நீரே எந்தன் புகலிடம். நீரே எந்தன் தஞ்சம்
நான் எதற்கும் அஞ்சிடேன். நான் எதற்கும் கலங்கிடேன்.
என் பாதையெல்லாம் நீரே என்னோடு கூட இருக்கின்றீர்.
நீர் சுற்றித் திரிந்த என்னை சரியான திசையில கொண்டு செல்கின்றீர்.
இறைவா, என் பெலகீன நேரங்களில் என்னை கைவிடாதிரும்.
நான் ஒருபோதும் சாத்தானின் வஞ்சக வார்த்தையில் விழுந்திடாது.
இவ்வுலகத்தையும், சாத்தானையும் நான் ஜெயிக்க பிறந்திருக்கிறேன்.
நீர் எப்படி ஜெயித்தீரோ, அப்படியே மாமிசத்தையும் ஜெயிப்பேன்.
ஆவியின் படி நடக்க என்னை நான் பழக்கப்படுத்திக் கொள்வேன்.
ஆவியின் கண்களை நீர் திறந்திடும் தேவா?! ஆண்டவரே!!
நான் குருடனாக இருக்கிறேன். நான் செவிடனாக இருக்கிறேன்.
நான் முடவனாக இருக்கிறேன். நான் வியாதியஸ்தனாக இருக்கிறேன்.
நான் ஊமையாக இருக்கிறேன். நான் பாவியாக இருக்கிறேன்.
இறைவா, நீர் ஒரு வார்த்தை சொன்னால் போதும்!!
நான் கட்டுகளுக்கு நீங்கலாகி விடுவிக்கப்படுவேன்,
என் பாவம் கழுவப்பட்டு, வியாதி நீக்கப்பட்டு, பார்வையடைவேன்,
என் தேகம் சுகமாகும், நான் கேள்வி ஞானம் பெறுவேன்,
இறைவா, உமக்கு பிரியமானவனாக மாறிவிடுவேன். ஆமென்.

02-12-2009

★

என் கடவுளே என் தெய்வமே உம்மை நான் ஆராதிக்கின்றேன்.
உம் துதியை நான் எந்நாளும் சொல்லி வருவேன்.
இயேசப்பா உம்மை நான் போற்றிப்பாடி ஆனந்தக்களிகூருவேன்.
எண்ணிக்கையற்ற ஸ்தோத்திர பலிகளை உமக்கு நான் ஏறெடுப்பேன்.
முந்தினவரும், பிந்தினவருமாயிருக்கிற என் தேவாதி தேவனே நீர் வாழ்க.
ஆதியும், அந்தமுமாயிருக்கிற என் சிருஷ்டிகரே உம்மை தொழுதேற்றுவேன்.
துன்மார்க்கனை அழிக்கிற தேவனே, நீரே அவனை இரட்சிக்கவும் செய்கிறீர்.
நான் துன்மார்க்கனாக இருந்தேன். என்னை இரட்சித்தீரே. அதுவே உதாரணம்.
இறைவா, என்னை தாழ்மையில் நினைத்தீர். நன்றி சொல்லிடுவேன்.
என்னை தயவாய் நினைவு கூர்ந்தீர். கோடி நன்றிகள் சுவாமி.
அப்பனே, ஆராதனைக்குரியவரே உம்முடைய அதிசயங்கள் ஆராய முடியாது.
இறைவா, உம்மை அறிய என்னை இன்னும் ஒரு படி மேலே ஏறச் செய்யும்.
எனக்கு உதவிடும், என்னை இன்னுமாக பெலப்படுத்தி பரிசுத்தமாக்கிடும்.
நான் இவ்வுலகத்திற்கு உரியவன் அல்லன். உமக்குரியவன் நானே!!
எனக்கு உதவி செய்யும் ஆண்டவரே. என்னை பரிசுத்தமாக்கிடும்.
கேடான எண்ணங்களை என்னைவிட்டு அகற்றிப் போட்டு விடும்.
தீய எண்ணங்களை உம்முடைய அக்கினியால் சுட்டெரித்து விடும்.
துன்மார்க்க சிந்தைகளை அறவே என்னைவிட்டு தூரப்படுத்திடும்.
நான் எப்பொழுதும் உமக்கே சொந்தம். நான் உம்முடையவன்.
நீரே என் அடைக்கலமும், எந்தன் புகலிடமும், என் கன்மலையுமானீர்.
நம்பிக்கைக்குரியவர் நீர் ஒருவரே, உம்மையே நான் நம்பி வந்தேன்.
உம் பாதையில் நான் நடக்கவே, உம்மைப்போல என்னை மாற்றிடுமே!
உம்முடைய பரிசுத்த வழியில் நான் நடந்து போக வேண்டுகிறேன்.
இறைவா உம்முடைய நாமத்தை உயர்த்தவே நான் வாஞ்சிக்கின்றேன்.
சர்வமும் படைத்தவர் நீரே. உம்முடைய பெலத்தை எனக்கு கட்டளையிடும்.
போஜனப்பிரியனாக நான் இராமல் உம்மை போற்றுகிறவனாக மாற்றிடும்.
சிற்றின்ப விரும்பியாக நான் இராமல் இடைவிடாமல் ஜெபிப்பவனாக மாற்றிடும்.
உபவாசித்து, உடலை வருத்தி உம்மில் நான் பெலனடைவேன்.
என்னை கண்ணின் மணியைப்போல பாதுகாக்கின்றவர் நீர்தானே!
உம்மையே நான் நேசித்து அன்பு கூருவேன்.
இறைவா, உம்முடைய அபிஷேகத்தினால் என்னை நிரப்பிடுமே!
உம்முடைய பரிசுத்த ஆவியினால் என்னை திருப்தியாக்கிடுமே!
சத்தியத்தை அறியும் வார்த்தையினால் என்னை வசப்படுத்திடுமே!
நான் நீதியை நோக்குகின்றேன். உலகத்தின் போக்கை விடுவேன்!
இறைவா இடுக்கமான வாசல் வழியே பிரவேசிக்கிறேன்.
எனக்கென்று சொந்த தேசம் உண்டு. அது பரலோகமே. ஆமென்.

03-12-2009

என் ஆண்டவர் நீரே, என் நம்பிக்கைக்குரியவரும் நீரேயவரே!
உம்முடைய பாதத்தில் நான் அமர்ந்திருப்பேன். நன்றி சொல்லுவேன்.
அன்பு கூறுவேன். உம்மை அதிகம் அதிகமாய் ஆராதிப்பேன்
எம்நேசர் எபிநேசர் என்பேன், என் யெகோவா யீரே என்பேன்.
எல்ஷடாய் என்பேன், எல்ரோயீ என்பேன், யெகோவா ரா:ப்பா என்பேன்
உம்மையே நான் நேசித்து களிகூருவேன். பெருமை பாராட்டுவேன்.
என் தேவன் நீர் நீதியின் சூரியன். நம்பிக்கையின் நாயகன்.
எல்லாவற்றையும் பார்த்துக்கொள்பவர். நீர் மாத்திரம் போதுமெனக்கு.
என் பாவங்களை மன்னியும். என்னை அங்கீகரியும்.
நான் பாவமென்று எண்ணாத காரியங்கள் உம் பார்வைக்கு பாவமானால்
அதையும் என்னில் மன்னியும். இனி பிறருக்கு எனக்கு உதவும்.
நான் பெலவீனன். தாழ்மையிலிருந்து உண்டானவன்.
என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.
நான் மரண இருளின் கட்டுகளில் இருந்து வந்தவன்.
என் சமுதாயம் கர்த்தரை அறியாத சமுதாயம்.
என் குடும்பம் இயேசுவை அறியாத குடும்பம்.
அதனையும் உம்முடைய பார்வையில் எங்களுக்கு கிருபை கிடைத்தது.
உம் நாமத்தை எனக்கு தரிப்பித்தீர். உம் இரத்தத்தினால் மீட்டுக்கொண்டீர்.
நிறைந்த புகலிடம். நிறைந்த அன்பர். நிறைந்த தஞ்சம்.
நான் உமக்குள் அதிக மகிழ்ந்திருப்பேன். சந்தோஷித்திருப்பேன்.
என் தேவன் இயேசு மகா இராஜனிடம் ஓடிச் செல்வேன்.
அவர் என் வழக்கை தீர்த்து வைப்பார். நான் சுகமாயிருப்பேன்.
அவர் எனக்கு ஆசீர்வாதத்தை பெருமழையாக பொழிந்தருளுவார்.
அவரே என் இன்பமும், பெலனும், அன்புமாயிருக்கிற தேவனாவார்.
உம்மை நான் என் ஜீவனிலும் மேலாக நேசிக்கின்றேன்.
இறைவா அந்த வைராக்கியம் இன்றும் பெருக வேண்டும்.
பரலோக நிச்சயத்தோடு நான் மரித்துப் போவேனே!!
இது ஆனந்தமே, என் பாக்கியமே. என் சிலாக்கியமும் அதுவே.
ஆராதனைக்குரியவர் நீரே என் ஆலயமாகிய சரீரத்தினில்
நீர் வாசம் செய்யும். என்னை உமது தைலத்தினால் அபிஷேகியும்.
நன்றி சொல்லி துதித்து, மிகுந்த மகிழ்ச்சியோடே வாழ்ந்திடுவேன்.
உம்முடைய ஆலயத்தில் நீர் எழுந்தருளுவீர். சந்தோஷமே!
நீரெனக்கு எப்பொழுதும் வேண்டும். என்னை விட்டு பிரியாதிரும்.
என்னை நான் பாதுகாக்க வழியுண்டோ? நீரே காத்திடும்.
நான் உம்மை விரும்புகிறேன். நேசிக்கிறேன்.
பாவத்தை வெறுக்கின்றேன். அல்லேலூயா. ஆமென்.

05-12-2007

அப்பா தேவே என் அன்பே ஆண்டவரே, உம்மை உயர்த்துகின்றேன்.
உம்மை அறியும் அறிவிலே என்னை நாள்தோறும் வழிநடத்தி செல்கின்றீர்.
நீரே பெரியவர். நீரே ஆண்டவர். உம் தூய வழியே மெய்யான வழி.
ஆராதனைக்குரியவர் நீரே என் வாழ்வும், விருப்பமும் நீரே.
இறைவா, நாளை மறுநாள் என் திருமணம் நிச்சயிக்கப்படுகின்றது.
என்னிடத்தில் ஒரு பொருளும் இல்லை. பணமும் இல்லை.
ஆனால் எனக்கொரு அசைக்கமுடியாத நம்பிக்கை மட்டும் இருக்கின்றது.
அது, இவையெல்லாவற்றையும் படைத்த பரிசுத்தர் என்னோடு கூட இருக்கின்றார்.
நீர் இருந்தால் போதும். நீர் வந்தால் போதும் என் திருமணம் சிறப்பாக்கப்படும்.
இறைவா நீர் வருவீரோ? நீர் என் வீட்டில் தங்குவீரோ?!!
நான் உம்மையே நம்பியிருக்கிறேன். உம்மோடு கூடவே நடக்கின்றேன்.
ஆராதனைக்குரியவர், என் அப்பா தகப்பனும் நீர் மாத்திரமே!!
இறைவா, நான் நாளை என் வாழ்க்கைக்கு பயணமாகிறேன்.
உம்முடைய நேசம் எனக்கு முன்பாக போகட்டும்.
தடைகள் யாவையும் உடைத்தெறியப்படட்டும். கரடானவை சமமாகட்டும்
உம்முடைய இராஜ்யத்தில் நான் சேர்ந்திட கிருபை செய்யும்.
என்னை நம்பி வந்திருக்கும் என் மனைவியையும் காத்துக்கொள்ளும்.
இறைவா, என் மனைவியை உம் வழியில் நடத்த கிருபை செய்யும்.
நீர் நல்லவர். நீர் பெரியவர். நீர் என்றும் மாறாதவராக இருக்கின்றீர்.
அனைத்தின் கர்த்தர். சமாதான கர்த்தர். அநாதி இராஜா!!
மகா பரிசுத்தர். சேனைகளின் கர்த்தர் நீர் என்றும் மாறாதவர்.
வல்லவர். என்னை வாழ வைக்கும் தெய்வம் நீர் மாத்திரமே.
இறைவா, என் சோம்பலை என்னை விட்டு அகற்றி போடும்.
நான் உமக்கு நன்றியோடு இருப்பேன். ஊக்கமாக வாழ்வும் செய்வேன்;
அதிசயர். அற்புதர். அன்பே ஆண்டவர். நீரே பெரியவர்.
வழியும் நீரே, சத்தியமும் நீரே, ஜீவனும் நீரே.
நீங்க போதும் இயேசப்பா. உங்க நேசம் எனக்கப்பா!!
இறைவா என்மேல் கிருபையாய் இருப்பவரே நீர் வாழ்க.
எல்லா துதி, கனம், மகிமைக்கும் பாத்திரர் நீங்க மாத்திரம் தானே.
அதிசயமாய் பெரிய காரியங்களும் செய்பவரும் நீர் தானே!!
உம் நாமம் என்றென்றும் பரிசுத்தப்படுவதாக.
நீர் பரிசுத்தர். பரிசுத்தர். பரிசுத்தர். மகா பரிசுத்தர்.
அப்பா என் பாடு மேன்மையே! என் மரியாதையே வாழ்க.
நீங்க போதும் இயேசப்பா, உங்க நேசம் எனக்கப்பா!!
நீங்க இல்லாத வாழ்வெல்லாம் வாழ்வாகுமோ?!
நீரே போதும் என் வாழ்க்கையிலே! ஆமென். அல்லேலூயா!

20-12-2009

எல்லாவற்றையும் செவ்வையாக செய்து முடிப்பவரே நீர் வாழ்க.
என்னுடைய திருமணத்தை எந்தவொரு தடையுமில்லாமல் சிறப்பாக முடித்துள்ளீர்.
உம்முடைய நாமத்தினால் உம் மகளை எனக்கு தந்துள்ளீர்.
இறைவா, இனி நான் நல்ல கணவனாக வாழவும் ஒரு படி உயர்த்தினீர்.
நன்றி. நன்றி. உமக்கே கோடி நன்றிகள் சுவாமி.
அப்பா, அந்த மகளும் - லலிதா ஸ்ரீ யும் உம்மை அறியணுமே!!
உம்மை அறிந்து, உம்மோடு நெருங்கி வாழ உதவணுமே!!
அப்பா தகப்பனே உம்மை நான் உயர்த்தி உயர்த்தி மகிழுவேன்.
என் தேவனே, எங்கள் குடும்பங்கள் ஒன்றாக சேரணும்.
கசப்புக்கள், கண்ணீர்கள் மாறி சந்தோஷமும், சமாதானமும் பெருக வேண்டும்.
இராஜாதி - இராஜா. தேவாதி தேவா நீரே சர்வ சிருஷ்டிக்கும் எஜமானர்.
உம்மைப்போல எனக்கு யாருண்டு ?! என்னோடு நீர் இருக்கின்றீர்.
நீர் மாத்திரம் எனக்கு போதுமானவராக என்றுமே இருக்கின்றீர்.
நல்லவரே என்றென்றும் நன்மைகளையே செய்பவரே வாழ்க.
உம் நித்திய வாழ்க்கையை எங்களுக்கு தந்தருளும்.
இறைவா, என் மனைவியை கண்ணோக்கி பாரும்.
அவளுக்கு வேண்டிய ஆலோசனைகளை நீரே வழங்கிடும்.
நீரின்றி ஒரு அணுவும் அசையாது. இறைவா நீர் பேசிடும்.
உம்முடைய வார்த்தைகளை தியானிக்கும்போதும் - படிக்கும் போதும்
என் மனைவியின் இருதயத்திலே நீர் பேசிடும்.
எனக்கு நீர் நன்மைகளை செய்தீர். உமக்கே நன்றி சொல்லுவேன்
ஆறுதலை தந்தீர். அதிசயங்கள் செய்தீர். நன்றி சொல்லிடுவேன்.
அன்பான தேவனே, அதிசய தேவனே நீர் மாத்திரம் போதுமெனக்கு.
என் குடும்பம் உம்முடைய பரிசுத்தத்தை ஏற்று தாங்கி வர வேண்டும்.
என் மனைவி கனிதரும் ஸ்திரியாக செழிக்க வேண்டும்
என் தாயும் - தந்தையும் சுகமடைய வேண்டும்.
என் தாய் என் தந்தை பெரும் மதிப்படைய வேண்டும்.
உலகம் எவ்வாறோ? இருந்து போகட்டும் எனக்கு கவலையில்லை.
இறைவா, உமக்குள்ளே நாங்கள் இருக்க வேண்டும்.
என் மனைவியை உம்மிடத்திலே ஒப்புக்கொடுத்தேன். நீர் காத்திடும்.
உம்முடைய தயவை என் மனைவியோடு கூடவே இருக்கட்டும்.
இறைவா என் ராஜா நீர் பெரிய காரியங்களை செய்திடுவீர்.
நாள்தோறும் நான் உம் நினைவாக இருக்க வேண்டும்.
இனியும் நான் உமக்குள்ளே வாழ வேண்டும்.
உம்முடைய ஊழியத்தை சிறப்பாக நான் செய்ய வேண்டும்.
இயேசுவே உம் நாமம் உயர வேண்டும், அல்லேலூயா. ஆமென்.

21-12-2009

என்மேல் தயவாய் இருக்கும் என் மேய்ப்பர் நீர்தான் இயேசுவே!
உமக்குள்ளே நான் எப்பொழுதும் சிந்தை தவறாது வாழ வேண்டும்.
இறைவா, இந்த அந்நிய தேசத்திலே என்னையும் என் மனைவியையும்
ஒன்று சேர்ந்து வாழ வழிவகை செய்திடும் இராஜனே!!
உமக்கே நான் ஆராதனை செய்து அன்பு கூர்ந்து வாழ்ந்திடுவேன்.
அப்பா தகப்பனே உம்மை உயர்த்தி உயர்த்தி பாடி மகிழ்ந்திடுவேன்.
அதிசயங்கள் நீர் செய்திடுவீர். அற்புதங்கள் நீர் நடத்துவீர்.
உம் மெய் பிரசன்னத்தினாலே என்னை நிறைத்து வாழச் செய்வீர்.
நான் சோர்ந்து போகும் நேரமெல்லாம் என்னோடு கூடவே இருக்கின்றீர்.
எனக்கு உதவிகள் செய்து அன்றாடம் ஆலோசனை செய்கின்றீர்.
எனக்கு இரட்சிப்பையும், மீட்பையும் தந்து ஜீவிக்க செய்கின்றீர்.
அப்பா உந்தன் நாமம் எனக்கு என்றென்றும் பேரின்பம்.
அதிசயங்கள் நீர் செய்கின்றீர். எனக்குரிய காரியங்களையும் நீர் செய்கின்றீர்.
நான் ஒன்றுமில்லாதவன். நான் வெறுமையானவன்.
உம்முடைய இராஜ்ஜியத்தை தேட எனக்கு உதவிகள் செய்யும்.
இன்னும் ஒரு படி உம்மை நோக்கி முன்னேற கிருபை செய்யும்.
இராஜனே, என் தேவனே எல்லா துதிகளுக்கும் பாத்திரரே!!
நன்றியால் என்னுள்ளம் என்றுமே உம்மை துதிபாடும்.
அக மகிழ்வேன். உம்மில் அன்பு கூருவேன். ஆராதித்திடுவேன்.
என் கருணையின் தேவா உம்மை கண்கூர்ந்து வாழ்த்துவேன்.
என் நோக்கம், என் விருப்பம் நிறைவாக வேண்டும்.
என் மனைவியோடு நான் சேர்ந்து வாழ வேண்டும்.
அவளோடு உம்மை நோக்கி ஜெபிக்க வேண்டும்.
தனிமையான வாழ்க்கையிலிருந்து எனக்கு விடுதலை கிடைத்தது.
இனி நான் ஒருவனல்ல, இருவராய் உம்மை தொழுது கொள்ள வேண்டும்.
இறைவா கிருபை செய்யும். உம் கிருபை மேலானது.
உம்முடைய கிருபை பெரிய காரியங்களை செய்ய வல்லதாமே!!
ஆராதனைக்குரியவர் நீர் அதிசயங்கள் பல செய்பவர்.
உம் விருப்பத்தை நான் நிறைவேற்ற வேண்டும்.
என் தெய்வமே நீரெனக்கு வேண்டும். நீரே போதும் எங்கள் வாழ்வில்.
என் தெய்வம் நீர். என் தகப்பன் நீரே. என் எல்லாமும் நீரே.
இராஜாதி இராஜனே, தேவாதி தேவனே நீர் வாழ்க.
உம் திருநாமம் என்றென்றும் உயர்த்தப்படுவதாக. ஆமென்.
எல்லாவற்றிலும் நீரே எனக்கு உதவி செய்பவர். நீர் வாழ்க.
என் மனைவியை நீரே பாதுகாத்துக் கொள்ளும். தெய்வமே!!
அன்பே நீரே என் சர்வ வல்ல தேவன். ஆமென். அல்லேலூயா!

22-12-2009

என் உயிரானவரான இயேசு உம்மை நான் ஒருநாளும் மறவேன்.
என்னை தாழ்மையிலிருந்து தூக்கியெடுத்து உம் பிள்ளையாக மாற்றினீரன்றோ!!
அப்பா தகப்பனே உம்மை நான் வாஞ்சிக்கின்றேன்.
உம்மையே நான் விருப்பமாக கொண்டிருக்கின்றேன்.
நானும் என் வீட்டாரும் உமக்கென கனி தரும் பிள்ளையாக மாற வேண்டும்
இம்மானுவேல் இராஜாவே எங்களோடு நீர் கூடவே இருக்க வேண்டும்.
பாவங்களை விட்டு விலகியோடி பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டும்.
இரட்சகரே என் நல்ல மேய்ப்பரே என்னை நீர் மேய்க்க வேண்டும்.
உமது சத்தத்தை கேட்டு அதன்படி நடக்கும் பிள்ளையாக நான் இருக்க வேண்டும்
என்னை உமது இரத்தத்தினால் மீண்டும் மீண்டும் கழுவி பரிசுத்தப்படுத்திடும்
நான் உமக்கென வாழ வேண்டும். உம் நீதியை சார்ந்திருக்க வேண்டும்.
இறைவா உம்மோடு வாழ்ந்து, உமக்கு பிரியமானதை நடப்பிக்க வேண்டும்.
தூயவரே என் துதிகளில் பிரியமாக இருப்பவரே நீர் வாழ்க.
வல்லமையால் என்னை நிரப்பிடும். அதிசயமாக என்னை நடத்திடும்.
உம்மை நான் விரும்புகிறேன். உம்மையே சார்ந்திருக்கின்றேன்.
என்மேல் உம்முடைய பரிசுத்த போர்வையை போட்டு மூடி விடும்.
இதோ உம்முடைய மகிமை என்மேல் வந்தது.
கர்த்தரின் வெளிச்சம் என்மேல் பிரகாசிக்கின்றது.
அதிசயரே, அற்புதரே உம்மோடு நான் சேர்ந்திருக்க வேண்டும்.
நல்லவரே வல்லவரே உம்மையே நான் நேசிக்கின்றேன்.
நான் இனி பாவியல்ல, உமக்காக பிழைத்திருக்கின்றேன்.
ஆண்டவரே - என் அற்புதரே எல்லாவற்றிற்காகவும் நன்றி சொல்கிறேன்.
என் வாழ்க்கையின் முக்கியமான நிகழ்வுகளில் உம்முடைய
சித்தமே எனக்கு முதலாவதாக இருக்கின்றது.
இறைவா நான் உம் புகழை பாட வேண்டும்.
எல்லா கிருபையும், எல்லா மகிமையும் நீரே எனக்கு சொந்தமானீரே,
இறைவா எனக்குரிய ஆசீர்வாதங்களை இன்று தந்துவிடும்.
நான் ஒன்றுமில்லாதவனாக இருந்து வருகின்றேன்.
என் கையில் ஒன்றுமில்லை. என் சேமிப்பில் ஒன்றுமில்லை.
என் பையில் ஒன்றுமில்லை. என்னிடத்தில் ஒன்றுமேயில்லை.
ஆனால் என்னிடத்தில் உள்ளது ஒன்று - அது நீரே!
நீரே பெரியவர். நீர் மாத்திரமே சர்வ வல்லவர்.
உம்முடைய நிழலில் நான் என்றும் மகிழ்ந்திருக்கின்றேன்.
என் வாழ்க்கையில் நீரே எனக்கெல்லாமுமாயிருக்கின்றீர்.
இரட்சகரும் நீரே. என் பரிகாரியும் நீரே. நீரே எனக்கு போதும்.
அப்பா உம்முடைய சித்தம் நிறைவேறட்டும். அல்லேலூயா. ஆமென்.

23-12-2009

மென்மையானவரே, என் தேவனே உம்மை ஸ்தோத்தரிக்கின்றேன்.
நீரெந்தன் தஞ்சமும், அடைக்கலமும், கோட்டையும், அனைத்துமாயிருக்கின்றீர்.
எல்லாவற்றையும் நீர் எனக்கு நன்மையாக்கிக் கொடுக்கின்றீர்.
நீரே சர்வ வல்ல தேவன். நீர் மாத்திரம் எனக்கு போதுமானவராயிருக்கின்றீர்.
இராஜாதி இராஜா, தேவாதி தேவா நீர் என்றும் மாறாதவராக இருக்கின்றீர்
சர்வ வல்லவராம் உம்முடைய நிழலில் நான் தங்குவேன்.
தினமும் எப்பொழுதும் நான் உம்முடைய பிள்ளையாக வாழ்ந்திடுவேன்.
சமாதான கர்த்தர் - ஆலோசனை கர்த்தர் நீர் என்றென்றும் நம்பிக்கைக்குரியவர்.
அப்பா தகப்பனே என்றும் உம்மை வாழ்த்தி போற்றிடுவேன்.
ஆயுள் நாளெல்லாம் உம்மை புகழ்ந்து போற்றிப் பாடுவேன்.
நீரெந்தன் பிரியம். நான் உமக்கு செல்லப் பிரியமானவன்.
இறைவா உம் பாதம் நான் பணிந்து உம் வழியில் நடந்திடுவேன்.
நித்திய நன்மையானவர் நீர். என்னையும் என்னைச் சார்ந்தோரையும்
உம்முடைய இராஜ்ஜியத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளும்.
இரட்சிப்பின் மேன்மையை என் குடும்பம் உணரச் செய்யும்.
இராஜாவே என் தேவனே, உம்மை இன்னும் அறிய வேண்டும்.
உம்முடைய வசனத்தை அதிகமாக தியானிக்க வேண்டும்.
உம்முடைய ஆலோசனையின் படி நான் நடக்க வேண்டும்.
என்றென்றும் உம்முடைய சொல் கேட்டு கவனமாக செயல்பட வேண்டும்.
இறைவா உம்முடைய அன்பொன்றே எனக்கு போதுமானது.
இறைவா இவ்வுலகில் இருப்பதைக்காட்டிலும் நீர் பெரியவராக இருக்கின்றீர்
இயேசுவே உம்மை உயர்த்தி உயர்த்தி போற்றி மகிழ வேண்டும்.
என் நினைவில் நீரே முதலில் இருக்கின்றீர்.
சில நாட்கள் உம்மை விட்டு சற்று தொலைவில் இருந்தேன்.
இறைவா இதோ உமது அடியேன். சேர்த்துக்கொள்ளும்.
நான் பாவிதான். ஆனாலும் நீர் எனக்காக இரத்தம் சிந்தினீர்.
உம்முடைய இரத்தத்தினால் எனக்கு பாவ மன்னிப்பு உண்டு.
அன்பே என் ஆறுதலே, உம்முடைய ஊழியத்தை சிறப்பாக செய்ய வேண்டும்
உம்முடைய ஊழியத்தை நான் ஆரம்பிக்க வேண்டும்.
தெய்வமே, என் இயேசுவே உம்மையே நான் சார்ந்திருக்க வேண்டும்
கண்மணிபோல என்னை காப்பவரும் நீங்க தானே!!
என் வாழ்க்கையை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்து விட்டேன்.
அதிசய தேவன் நீரே! அன்பின் தெய்வம் நீரே!
பாதுகாப்பளிக்கிறவரும் நீரானவரே என் தகப்பனே நீர் வாழ்க.
உம்முடைய நாமம் அதிசய கர்த்தர். ஆலோசனை கர்த்தர்.
சகல மகிமைக்கு சொந்தக்காரர். ஆமென். அல்லேலூயா,

24-12-2009

இறைவா உம்முடைய துதியை நான் சொல்லி வருவேன்.
உம்முடைய புகழை நான் பிறருக்கு தெரியப்படுத்துவேன்.
உம்முடைய நாமம் எல்லோருக்கும் உயர்ந்த அடைக்கலமாக இருப்பதாக.
உம் நித்திய வீட்டில் அடியேனையும் சீக்கிரமாக சேர்த்துக்கொள்ளும்.
உம் இராஜ்ஜியத்தின் பொக்கிஷங்களை எனக்கு திறந்தருளும்.
உமது நீதியையும் - இராஜ்ஜியத்தையும் இன்னும் தேட கிருபை செய்தருளும்.
ஆராதனைக்குரியவர் நீர் என்றென்றும் என்னை பாதுகாப்பவரும் நீர்.
உமது வல்லமையால் என்னை நிறைந்து பயன்படுத்திடும்
இறைவா உம்முடைய கிருபையால் எங்களை காத்துக்கொள்ளும்.
நீர் நல்லவர். நீர் வாக்கு மாறாதவர். நீர் பெரியவர். நீர் உயர்ந்தவர்
உமக்கே எல்லா புகழும், ஸ்துதியும், ஸ்தோத்திரங்களும். ஆமென்.
நீர் நீதியுள்ளவர். நீர் நியாயம் செய்பவர். நீர் ஆட்சி செய்பவர்.
உமக்கே மகிமையும், கனமும், ஆராதனையும். ஆமென்.
நீரொருவரே தேவன். நீர் சிருஷ்டிகர். நீர் சகல கலா வல்லவர்.
உம்முடைய முகத்திற்கெதிரே நிற்பவன் யார்??
நீர் சேனைகளின் கர்த்தர். பரிசுத்தர்.. பரிசுத்தர்.. பரிசுத்தர்
உம்முடைய பிரசன்னத்தால் இவ்வுலகை நிரப்பிடும் ராஜனே.
அன்பே உருவான எங்கள் தேவனே நீர் வாழ்க. வாழ்க.
நீர் மரித்தீர். மரணத்தை ஜெயித்தீர். உயிர்த்தீர்.
பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கின்றீர்.
மீண்டும் இவ்வுலகிற்கு வரப் போகிறீர்.
அந்த நாளை நாங்கள் ஆவலோடு எதிர்பார்த்து காத்திருக்கின்றோம்.
நீர் சமாதானத்தின் தேவன், எங்களை அபிஷேகம் செய்யும்.
நீர் எனக்கு தந்த வேலையை நான் நடத்த எனக்கு ஆலோசனை சொல்லும்
இராஜாதி இராஜனே, தேவாதி தேவனே நீர் வாழ்க வாழ்க.
இறைவா என்னை நான் பாதுகாத்துக்கொள்ள ஒரு புது அக்னி அபிஷேகம் தாரும்
இதுவரையில் எனக்கு தந்த அபிஷேகத்தை காட்டிலும்
ஏழு மடங்கு அதிகமாக ஆவியை பொழிந்தருளும்.
உம்முடைய நாமத்தை நான் விருப்பமாக கொண்டிருக்கின்றேன்.
உம்மைத் தேடித்தேடி நான் அலைந்து வருகின்றேன்.
எனக்கு வழியை காட்டிடும். என் கைகளை இன்னும் பயன்படுத்திடும்
நான் உமக்காக எரிந்து ஜொலிக்கின்ற நட்சத்திரமாக வேண்டும்.
உம்முடைய இராஜ்ஜியத்தில் இவ்வுலகின் ஜனத்தை சேர்க்க வேண்டும்
சாத்தானின் கிரியைகளை வெல்ல வேண்டும்.
சர்வ வல்லவரின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டும்.
சீக்கிரம் வாரும், இவ்வுலகை இரட்சித்துக் கொள்ளும். ஆமென்.

25-12-2009

இறைவா, உம்முடைய சிம்மாசனத்தின் கீழாக அமர்ந்திருக்கின்றேன்.
இன்று இயேசுவின் பிறந்த நாளென்று இவ்வுலகம் கொண்டாடுகின்றது.
ஆனால் எத்தனை பேரின் இருதயத்தில் இயேசு பிறந்தார் என்று தெரியவில்லை.
ஆகவே, என் இருதயத்தில் இயேசு பிறந்து விட்டார்.
அவர் என்னில் என்னோடு கூடவே வளர்ந்து வருகிறார்.
அவரோடு சேர்ந்து நானும் வளர்ந்து வருகின்றேன்.
ஆகவே, அவரைப்போலவே நான் மாறி வர விரும்புகிறேன்.
பாவிகளை நேசிக்கின்ற மனதை எனக்குத் தந்தருளும்.
பரதேசிகளை விசாரிக்கின்ற அன்பை என் இருதயத்தில் வைத்தருளும்.
நான் எப்பொழுதும் உம்முடைய தயவில் மகிழ்ந்திருக்க ஆசைப்படுகின்றேன்.
ராஜாவே என் தேவனே சர்வ சிருஷ்டிகரே நீர் வாழ்க.
உம்முடைய நித்திய இராஜ்யத்தில் எங்களுக்கு ஒரு இடத்தை தந்தருளும்.
நீர் பெரியவர். நீர் உண்மை நிறைந்தவர். நீர் வாக்கு மாறாதவர்.
உம் நாமம் எனக்கு என்றென்றும் உயர்ந்த அடைக்கலம்.
நீர் சர்வ வல்லவர். நீர் சத்தியம் நிறைந்தவர். நீர் பெரியவர்.
உம்முடைய மகிமையின் கீழாக நான் நின்று உம்மை நோக்குகின்றேன்.
ராஜாவே, என் தேவாதி தேவனே நீர் எனக்கு சொந்தமானவர்.
இவ்வுலகம் எனக்கு சொந்தமானதல்லவே!! நீரே எனக்கு சொந்தம்.
அப்பா தகப்பனே, என் அன்பே உருவான அதிசயரே நீர் வாழ்க.
கவலை, கஷ்டங்கள், துன்பத்தை போக்குகின்ற நல்ல மேய்ப்பனே.
நீரே எனக்கு போதும். நீர் மாத்திரம் எனக்கு வேண்டும்.
நீங்க இல்லாத ஒரு வாழ்க்கையை நான் நினைத்து பார்க்க முடியவில்லை.
இறைவா, என் வாழ்க்கையை ஒரு அதிசயமாக மாற்றினீர் நன்றி.
நான் உம்முடைய நிழலில் என்றென்றும் தங்கிடுவேன். நீர் நல்லவர்.
எனக்கு பிரியமானவர். எனக்கு விருப்பமானவர். என் ஆசையும் நீரே.
இறைவா, நீர் என் கைப்பிடித்து நடக்க பழக்குவிக்கின்றீர்.
நன்றி சொல்லி உம் கிருபையை என்றென்றும் சொல்லி வருவேன்.
இறைவா, என் மனைவியின் குடும்பத்தை நீர் சமாதானத்திற்குள்ளாக்கினீர்.
நன்றி சொல்லி உம்முடைய நாமத்தை நமஸ்கரித்திடுவேன்.
நீர் வாழ்க. உம்முடைய இராஜ்ஜியம் வாழ்க. ஆமென். ஆமென்.
நீர் அதிசயமானவர். நீர் அலைகளை காத்தவர். வாழ்க. வாழ்க.
என் நம்பிக்கைக்கு உரியவர். என் நம்பிக்கை ஒருநாளும் வீணாகாது.
என் தேவன் நீர். என் ராஜா நீர். என் துணையாகவும் நீர் மாத்திரமே.
நீரில்லாத வாழ்வெல்லாம் எனக்கு வாழ்வல்ல!
என்னுள்ளே வாரும் நீர் வாசம் செய்யும். நீர் வாழும்
நான் உயிர்வாழ்பவன். நான் உம்மோடு உம் வருகையில் எழுந்திடுவேன். ஆமென்

26-12-2009

★

என் வாழ்க்கையின் ஒளியே தீபமே நீர் மாத்திரம் இயேசுவே.
உம்முடைய வாயின் வசனங்களினால் என்னை திருப்தியாக்குகின்றீர்
உம்முடைய பிரசன்னத்தினால் மூடி மறைத்து அபிஷேகிக்கின்றீர்
உம்முடைய ஆலோசனையினால் என்னை நீர் வழிநடத்துகின்றீர்.
ராஜாதி ராஜாவே. தேவாதி தேவனே நீரே எனக்கு போதுமானவர்.
உம்முடைய அதிசய காரியங்களினால் என்னை நீர் செம்மைப்படுத்துகின்றீர்
ஆகவே என் வாய் உம்மை உயர்த்துகின்ற சக்தியினால் நிறைந்துள்ளது.
வானமும், பூமியும் உம்முடைய வார்த்தையினால் படைக்கப்பட்டிருக்கிறதே!!
நீர் நல்லவர். என்றென்றும் வாக்குகள் மாறாதவர். நன்றி நன்றி
இறைவா என்னிடத்தில் ஒன்றுமில்லை. நீரே என் பெலன்.
உம்முடைய பிரியமானவன் என்று நான் பெயரெடுக்க விரும்புகிறேன்.
ஆண்டவரே, உம் பாதத்தை நான் பிடித்துக்கொண்டேன். இனி விடப்போவதில்லை
எந்தன் கன்மலையானவர் நீர், இனி உம்மையே அதிகம் நேசிப்பேன்.
என்னை தொட்டு தூக்குபவர். என்னை பாதுகாப்பவரும் நீர் மாத்திரமே!!!
நன்றி சொல்லி சொல்லி உம்முடைய நாமத்தை நான் உயர்த்திடுவேன்.
உம்முடைய அதிசயங்களை நான் சொல்லி விவரித்துவிடுவேன்.
நீர் நல்லவர். உயர்ந்தவர் என்றென்றும் மகிமைக்கு பாத்திரர்.
இறைவா, என்னை கண்ணோக்கிப்பாரும். என்னை [illegible].
என்னோடு கூட பேசிடும். என் மனக்கண்களை தெளிவுபடுத்தும்.
ஆராதனைக்குரியவர் நீர் நீர் மாத்திரமே! என்னை ஆளும் கர்த்தரே!
அன்பே என் ஆறுதலே. அதிசயங்கள் செய்யும் தேவனானவரே.
உம்முடைய கர்த்தத்துவங்கள் ஆராய முடியாதவைகள்.
நீர் சர்வ வல்லவர். உமக்கு மிஞ்சின காரியங்கள் இப்பிரபஞ்சத்தில் ஒன்றுமில்லை
இறைவா, என் மணவாளரே, என் இயேசு இராஜனே வாழ்க.
என் குடும்பம் உம்மை பற்றிக்கொள்ள வேண்டும்.
என் தலைமுறைகள் இரு மடங்கு அபிஷேகத்தினால் ஆசீர்வதிக்கப்பட வேண்டும்
இறைவா, உம் பாதம் நான் பணிந்து உம் புகழை பாடி மகிழ்வேன்.
நீர் மாத்திரம் எனக்கு போதும். நீரே எனக்கு வேண்டும்.
உம்முடைய நித்திய இராஜ்யத்தை நான் சுதந்தரிக்க வேண்டும்.
என்னோடு கூடவே என் குடும்பத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.
ஆகவே, இயேசுவே உம்மை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
உற்றார், உறவினர்கள் உம்மை அறிய வேண்டும்.
எனக்கு கிடைத்த பெரும் இன்பம் அவர்களுக்கும் கிடைக்க வேண்டும்.
இறைவா அவர்களையும் நீர் அபிஷேகிக்க வேண்டும்.
அப்பா தகப்பனே உம்மை நான் உயர்த்தி மகிழ்ந்திடுவேன்.
நீர் வாழ்க. உம்முடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக. ஆமென்.

27-12-2009

என் மகிமையின் தேவனே உம்மை நமஸ்கரிக்கின்றேன்.
உமது மேலான நாமத்தை நான் போற்றித்துதித்து பாடுகின்றேன்.
இராஜாதி இராஜா தேவாதி தேவா உம்மை உயர்த்தி பாடுகின்றேன்.
என்னை இரட்சித்தவர், என்னை உருவாக்கி வருபவர்.
உம்முடைய நித்திய வல்லமைக்கு நான் அடிபணிகிறேன்.
வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தவர். நீரே சர்வ வல்லவர்.
இறைவா, உம்முடைய நாமத்தினாலே நான் ஜெயிப்பேன்.
போராட்டங்களை ஜெயிப்பேன். எதிரிகளை ஜெயிப்பேன்.
அப்பனே என் அதிசயமே நான் உமக்கு அடிப்பணிகிறேன்.
நீர் சடங்கு, சம்பிரதாயங்களை வெறுக்கின்றீர்.
ஆவியின் படி நடக்கவும், வழிநடக்கவும் ஆலோசனை தருகின்றீர்.
இறைவா என் இயேசு மணவாளனே நீர் வாழ்கவென்பேன்.
நீர் பெரிய காரியங்களை செய்கின்றவர். நீரே சர்வ வல்லவர்.
உம்முடைய நாமத்தை நான் பிரியத்துடன் கொண்டாடுவேன்.
அப்பா தகப்பனே, என் ஆறுதலின் தேவனே நீர் வாழ்கவென்பேன்
என்னை சிருஷ்டித்தவர் நீர்தானே. உம்மையே ஆராதித்திடுவேன்.
பெரிய காரியங்களை நீர் செய்திடுவீர். நீரே காரியக்கர்த்தா!
செங்கடலை இரண்டாக பிளந்த உம் வல்லமையை என்னே சொல்வேன்!
ஆனாலும் இப்பிரபஞ்சத்தை படைத்த உம் கரம் எவ்வளவு வல்லமையானது?
இறைவா, இன்னும் உம்மை நான் அறியவேண்டும். உம்மில் வளர வேண்டும்.
என் இயேசுவே, என் தெய்வமே என் பிரியமும் நீர் மாத்திரமே ஆமென்.
துதி ஸ்தோத்திரங்கள் உமக்கே நான் ஏறெடுத்திடுவேன்.
இராஜனே என் இயேசு மணவாளனே உம்மையே நான் சார்ந்துக்கொள்வேன்
மகிமையின் தேவா, மனதுருகும் தேவா, உம் நாமம் உயர்த்திடுவேன்.
நீர் நல்லவர். சர்வ வல்லவர். உம்முடைய நிழலில் நான் தங்கிடுவேன்.
பெரிய பெரிய காரியங்களை நீர் செய்கின்றீர். அல்லேலூயா. ஆமென்.
உன்னதமான உம்முடைய புயங்கள் எனக்கு ஆதாரம்.
நான் உம்முடைய கரத்தை பிடிக்கவில்லை. நீரன்றோ தாங்கிபிடிக்கின்றீர்.
இறைவா உம்முடைய பரவசத்தாலே என்னை நிறைத்திடும்.
இராஜாவே, என் தேவனே உம்முடைய மகிமையால் என்னை மூடிக்கொள்ளும்.
எதிராளிகளை வெல்ல உம்முடைய பட்டயத்தை என் நாவில் வைத்திடும்.
நான் பாவிதான். ஆனாலும் நீர் இரத்தம் எனக்காக சிந்தினீர்
நான் பரிசுத்தமடைந்தேன். உம்மாலே ஜெயம் பெற்றேன்
உம்முடைய காயங்களால், தழும்புகளால் நான் சுகம் பெற்றேன்.
இறைவா உமக்கு நன்றி. எல்லா துதியும் - புகழும் உமக்கே.
உம்முடைய எல்லா நன்மைகளுக்காகவும் நன்றி. அல்லேலூயா ஆமென்.

28-12-2019

இறைவா, என் செழுமையெல்லாம் உம்மாலே ஆசீர்வதிக்கப்பட்டது.
உமக்கு என்னுடைய காலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.
ஆண்டவர் நீர் என்றாலும் போற்றப்பட தக்கவர். நீர் வாழ்க
என்னுடைய அப்பத்தை நீர் ஆசீர்வதித்தீர் நன்றி நன்றி
இறைவா உம்முடைய துதியை என் வாயில் நான் ஏந்தி வருவேன்
அன்பே என் ஆதியனே உம்மை ஆராதித்து நான் அகமகிழ்வேன்.
என் சத்தியமே என் நித்தியமே உம்மையன்றி எனக்கு யாருண்டு.
உம் நாமம் உயர்த்தி உயர்த்தி மகிழ எனக்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி.
அப்பா தகப்பனே உம்மை நான் பாடுவேன். ஆராதிப்பேன்.
உம் தூய வழிகள் எனக்கு ப்ரியமானவைகள். நீர் நல்லவர்.
உம்முடைய இரக்கத்தினால் நான் வாழ்வு பெற்றேன்.
உம்முடைய கிருபையினால் நான் பாக்கியம் அடைந்தேன்.
நீர் சர்வ வல்லவர். உம்முடைய நிழலில் நான் தஞ்சமடைந்தேன்.
வானம் பூமி யாவற்றையும் படைத்த என் இயேசு இறைவனே
என்னை உம் சாயலாக படைத்தமைக்காக நன்றி சொல்லுவேன்
அன்பே என் ஆறுதலின் தேவனே நீர் வாழ்க. வாழ்க.
உம்முடைய சித்தம் இப்பூமியிலும், பிரபஞ்சத்திலும் நிறைவேறுவதாக.
காலையில் பூக்கும் பூ உம்முடைய அன்பை விளக்குகின்றதே
மாலையில் காய்க்கும் கனியும் உம்முடைய தயையை நினைக்கின்றதே!
நீர் பெரியவர். உம்மாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை.
இறைவா உமக்கே என் நன்றி பலிகளை ஏறெடுக்கின்றேன்.
நீர் சமாதானம் நிறைந்தவர். சத்தியமுள்ளவர். அடியேனை காத்தவர்.
நீர் வாழ்க. உம் நாமம் வாழ்க என்றும் மகிமைப்படுவதாக.
நன்றி ராஜா எல்லா அனைத்துக்காகவும் நன்றி சொல்கிறேன்.
நீர் செய்த சகல நன்மைகளுக்காகவும் என்றென்றும் நன்றி சொல்லி வருவேன்.
நான் நிற்பதும் நிர்மூலமாகாமலிருப்பதும் உமது சுத்த கிருபை.
நீர் வாழ்க. உம்முடைய அபிஷேகத்திற்காக நன்றி சொல்லி வருவேன்.
ஆண்டவரே கர்த்தாவே இன்றும் உம்மோடு நெருங்கி வாழ கிருபை செய்யும்
கிருபாகரனே உம் முகத்தை எனக்கு காட்டும். நான் பாவி.
என்னுடைய தேவன் நீர் சகல காரியங்களையும் செய்ய வல்லவர்.
நீர் பெரிய காரியங்களை செய்து வருகிறீர். என் வாழ்வில் நீரே பெரியவர்.
உம்முடைய நாமத்தை நான் என்றென்றும் தொழுதுகொள்வேன்.
உம்முடைய ஆலோசனையின் படி நான் நடப்பேன்.
நீரே என் ஆத்தும நேசர். உம்முடைய அன்பே பிரதானம்.
இறைவா உம்முடைய அன்பை நான் விரும்புகிறேன்.
நீர் நல்லவர். உமக்கே அல்லேலூயா துதி பாடி வருவேன். ஆமென்.

29-12-2009

காலமெல்லாம் உடனிருந்து என்னை வழிநடத்துபவர் நீர்தானே!!
உம்முடைய பாதையெல்லாம் நெய்யாய் பொழிவதற்காக நன்றி சொல்கிறேன்.
நீதிமானை எல்லா நாட்களிலும் செழிப்பாக வைத்திருக்கிறீர் நன்றி.
துன்மார்க்கரையும், அக்கிரமக்காரர்களையும் அழிவிற்கு ஒப்பு கொடுக்கிறீர் நன்றி
உம்முடைய சத்தியங்களையெல்லாம் அடிமனதில் தியானிக்க செய்வதற்காக நன்றி
என் தேவனே என் ராஜனே உம் ஊழியத்தை நான் செய்யணுமே!
சிறப்பாக செய்து முடிக்க வேண்டும். வித்தியாசமான ஊழியமாகணும்.
அன்பே தேவனே, அதனால் பல மில்லியன் மக்கள் இரட்சிக்கப்பட வேண்டும்.
இறைவா என் இராஜனே நீரே எனக்கு அடைக்கலம்.
உம்முடைய கிரியைகளை நான் தியானிக்கும் போது,
நீர் எவ்வளவு வல்லவர் என்று அறிய முடிகிறது.
இறைவா, இப்பூமியை ஆட்சித்திடும். விடுதலை தாரும்.
அவர்களுடைய மனக்கண்களை திறந்திடும். நன்றி.
அன்பே என் தேவனே, ஆறுதலே நீரே என் தஞ்சம்.
உம்முடைய அன்பே எனக்கு பிரதானம். உமக்குள் நான் தஞ்சம் பெறுகிறேன்.
இறைவா நீர் அதிசயங்கள் செய்கின்றீர், உம்மை துதிக்கின்றேன் நான்.
உமக்குள்ளே எனக்கு நித்திய மகிழ்ச்சி எந்நாளும் உண்டு
இறைவா, உம்முடைய கற்பனைகள் என்னை பரிசுத்தப்படுத்தும் பொழுது
இயேசுவே உமக்குள்ளே நான் எந்நாளும் வெற்றி சிறப்பேன்
மெய்மையானவரே என் துதிகளில் மகிழ்கின்ற கர்த்தரே.
நீரே எனக்கு போதும். உம்முடைய தயவானதே வேண்டும்
இறைவா என்னுடைய காரியங்களை உம்மிடத்தில் ஒப்புவிக்கின்றேன்
தேவனே என் இராஜனே என்னை நோக்கி பாருமைய்யா!!
என்னிடத்தில் பேசுமைய்யா. எனக்கு உதவி செய்யுமைய்யா!
எனக்காக ஜீவனையும் கொடுத்தவர் ஒருவர் இருக்கின்றார்.
அவருடைய இரத்தத்தினால் நான் கழுவப்பட்டேன்.
அவருக்குள் நான் ஒருநாளும் வீணாக போவதில்லை.
நான் படும் பிரயாசமும் ஒருநாளும் வீணாக போகாது!
தேவனே என் மகா இராஜனே உம்முடைய பிள்ளை நான்.
நான் இன்னும் பரிசுத்தமடையணும். என்னை பரிசுத்த மாக்கிடும்.
உம்முடைய அபிஷேகம் வேண்டும். அபிஷேகம் தந்திடும்.
அதிசயங்களை காணச்செய்கிறவர் நீர். நான் அற்புதமாக சிருஷ்டிக்கப்பட்டேன்
இறைவா உம்முடைய எல்லா நன்மைகளுக்காகவும் நன்றி.
உம் நாமம் எனக்கு உயர்ந்த அடைக்கலம். நீரே பெரியவர்.
உம் தூய வழிகள் எனக்கு பேரின்பம். அதுவே ஜீவன்.
நீரென் கன்மலை. அவரே என் துணையாளர். ஆமென். அல்லேலூயா.

★

30-12-2009

என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி. அவர் புகழ் என்றும் பாடு நீ.
அவருடைய சத்துவங்கள் அளக்கமுடியாத பொருளாய் இருக்கின்றன.
அவர் நமக்கு செய்த சகல உபகாரங்களையும் என்றென்றும் மறவாதே!
என் ஆத்துமாவே அவருடைய நன்மைகளை நினைத்து நன்றி சொல்.
தாழ்மையிலிருந்து தூக்கியவரை ஒருபோதும் மறந்து போகாதே!!
கைதூக்கி விட்டவரை என்றென்றும் நினைத்து நன்றியோடு வாழ்ந்திடு!
என் ஆத்துமாவே உன்னை இரட்சித்தவரை நீ ஸ்தோத்திரம் பாடு.
அவருடைய கையின் கிரியைகளை எண்ணி களிகூரு.
அவருடைய சர்வ வல்லமையை அறிவித்து ஆனந்தப்பாட்டு பாடு!
அவரில் ஒருநாளும் சோர்வாக இருக்காதே!!
அவரே உனக்கு நல்ல மேய்ப்பன். அவரே உனக்கு இரட்சகர்.
இராஜாதி இராஜனே, தேவாதி தேவனே உம் கிருபை எனக்கு போதும்.
எத்தனையோ நன்மைகளை நீர் எனக்கு செய்தீர்.
அவற்றையெல்லாம் நான் நாள்தோறும் எண்ணி நன்றி கூறுகின்றேன்.
இரட்சகரே என் இயேசு நாதரே உம் பாதம் நான் பணிவேன்.
உம் சித்தம் நான் செய்து உம்மிடத்தில் சேர்ந்துக் கொள்வேன்.
உம்முடைய பிரசன்னத்தை வாஞ்சிக்கின்றேன். நீரெனக்கு வேண்டும்.
நீரில்லாத வாழ்க்கையை என்னால் எண்ணிப்பார்க்க முடியவில்லை.
கருணையின் தேவா, கருணாநிதியே நீர் வாழ்க. வாழ்க.
உம்முடைய அன்பு எனக்கு பெரிய கிருபை. அதனால் நன்றி.
இயேசுவே உம்மாலே நான் பிதாவினால் அன்பு கூரப்பட்டேன்.
பரிசுத்த ஆவியானவரால் நான் உமக்குள் பரிசுத்தமடைந்தேன்.
ஆராதனைக்குரியவர் நீரொருவரே. உமக்கே ஆராதனை.
உலகம் என்னை ஒன்றும் செய்ய முடியாது. நீரே பெரியவர்.
உம்மாலே நான் இவ்வுலகத்தை ஜெயித்தேன். இன்னும் ஜெயிப்பேன்.
இறைவா, எனக்கு உம்மை வெளிப்படுத்தும். நீரே பெரியவர்.
இராஜாதி இராஜா, தேவாதி தேவா உம் நாமம் உயர்த்தப்படணும்.
உம்முடைய இராஜ்ஜியத்தை நான் இன்னும் ருசிக்க வேண்டும்.
தேவதூதர்களோடும் சேராபீன்களோடும் உம்மை ஆராதிக்க வேண்டும்.
நாதத்தோடும், தம்புரோடும் உமக்கென சங்கீதம் பாட வேண்டும்.
அப்பா தகப்பனே உம்மை நான் அன்போடு ஆராதிக்கின்றேன்.
என்னுள்ளமெல்லாம் திருப்தியோடும், சமாதானத்தோடும் இருக்கின்றது.
இறைவா நீர் பெரிய காரியங்களை செய்யும் பரிசுத்தர்.
என் வாழ்க்கையில் நீர் செய்த எல்லாவற்றிற்காகவும் நன்றி சொல்லுவேன்.
அப்பனே என் தேவனே என்னை ஆசீர்வதியும். இன்னும் தேவை.
உம்மை நோக்கி நான் நடந்து வாழவேண்டும். ஆமென். அல்லேலூயா.

31-12-2009

★

என்னுடைய தேவாதி தேவனுக்கு சரணம். நீர் போற்றுதலுக்குரியவர்.
என் பாவங்களை என்னை விட்டு நீக்கியருளும்.
என் மீறுதல்களையும் எண்ணிப்பாராதேயும்.
நீரே என் இரட்சகரும், என் தேவனுமானவரே! நீர்தான் அடைக்கலமானவரே!
இறைவா உம்மை நான் நேசிக்கின்றேன். ஆராதிக்கின்றேன்.
இராஜாதி இராஜனே, தேவாதி தேவனே என்மேல் மனமிரங்கும்.
என் மீட்பரும், என் தேவனும் என் இரட்சகருமானவரே நன்றி.
அப்பா தகப்பனே, என்னை நீர் அன்பாக அழைக்கின்றீர்.
நீர்தான் தஞ்சமும், அடைக்கலமும், கேடகமுமாயிருக்கின்றீர்.
அதிசயங்கள் செய்கின்றீர். அற்புதங்களையும் செய்கின்றீர்.
சத்தியமானவரே விதமாய் எங்களை வழிநடத்தி செல்கின்றீர்.
இறைவா என் மனதை உமக்கு அன்பாக வைக்கின்றேன்.
இராஜனே, தேவனே உமக்கான அர்த்தங்களை தெரிந்துக்கொள்ளும்.
உம்முடைய காரியங்களை எந்த மனதுக்கு காட்டுமே.
ஆ! அல்லேலூயா உமக்கு நான் பாடி மகிமைப்படுத்துவேன்.
இறைவா, உம்மை நோக்கி உளம் பாடையில் எனக்கு நீர் துணையாயிரும்
என்னை நினைத்தவரே, என்மேல் கிருபையாயிரும். என்னை நேசிப்பவரே, நன்றி.
உம்முடைய கரம் என்மேல் அமைவதால் நான் உம்மை துதித்திடுவேன்.
தேவனே, என் கன்மலையே, உந்தன் நாமத்தை நான் உயர்த்துவேன்.
இந்த வருடம் முழுவதும் என்னை நீர் கண்மணிப்போல காத்தீர்.
எல்லாவற்றிற்காகவும் உமக்கு நன்றி சொல்லி துதி பாடுவேன்.
இரட்சகரே என் நல்லவரே உமக்கே நான் ஆராதனை செய்திடுவேன்
என் மேய்ப்பர் நீரே பெரியவர். எல்லாவற்றிற்கும் மேலானவர்.
உம்முடைய நாமம் எனக்கு உயர்ந்த அடைக்கலம்.
உம்முடைய கிருபையே என்னை இந்த வருடம் முழுவதும் காத்து வந்தது.
எல்லாவற்றையும் நீர் நன்மையாக எனக்கு செய்து முடித்தீர்.
இறைவா நான் உமக்காக மெய்மையாக செய்தேனோ அறியவில்லை?!
இறைவா 2010ல் உமக்கான பிரியமான மனதாக என்னை மாற்றும்.
உம்முடைய சித்தம் செய்து வாழ எனக்கு கிருபை செய்யும்.
என் குடும்பமும், என் தங்கை குடும்பமும், உற்றார், உறவினர்களும்
அவருடைய குடும்பமும், அவர்களின் குடும்பத்தார்களின் குடும்பமும்
நான் வாழ்ந்த தேசமும், நான் வாழுகின்ற தேசமும்,
நான் வாழப்போகின்ற தேசமும், இவ்வுலகமும்
ஆரோக்கியமாக வாழவும், ஆசீர்வாதமாக வாழவும்
செழிப்பாகவும், பரிசுத்தமாகவும், தேவனுக்கேற்றவர்களாகவும்
வாழ கிருபை செய்தருளும். உதவி செய்தருளும். ஆமென். அல்லேலூயா.

31-12-2009
9:00 P.M

★

இறைவா எனக்கு இங்கே யாருமில்லை.
புத்தம் புதிய ஆண்டை கொண்டாட நண்பர்கள் இல்லை.
இராஜாவே, தேவனே என் குடும்பம் என்னோடு இல்லை.
பரிசுத்த ஆலயக்கூட்டமும், சபையோரும் என்னுடன் இல்லை.
என் மனைவி என்னோடு இல்லை.
என் தாய் தந்தை என்னோடு இல்லை.
என் தங்கை என்னோடு இல்லை.
என் மேய்ப்பரும் என்னோடு கூட இல்லை. - ஆனால்
இயேசுவே என் தேவனே நீர் என்னோடு கூடவே இருக்கின்றீர்.
உம்மோடு நான் என் புத்தாண்டை கொண்டாட விரும்புகிறேன்.
உம்மோடு மாத்திரம். உம்மோடு தனியாக இருக்க வாஞ்சிக்கின்றேன்.
இராஜாவே என் இரட்சகரே நீரெனக்கு வேண்டும்.
என்னிடத்தில் ஒன்றுமில்லை. நான் பரதேசி. ஒன்றுமில்லாதவன்.
என்னிடத்தில் இருப்பதை நான் தருகின்றேன். அது நான் தான்!!
என்னையே உமக்கு தந்துவிடுவேன். நீரென் மெய்யும் அடைக்கலமும்.
அன்பே உருவான என் தேவனே நீரெந்தன் அடைக்கலமே!!
என்னுள்ளம் உந்தன் பால் ஏக்கமாக இருக்கின்றது.
இறைவா, நான் வெறுமையாய் இருக்கின்றேன். என்னை மெய்ப்படுத்தும்
இரட்சிப்பின் பாத்திரத்தை கையில் ஏந்தி உம்மை தொழுதுகொள்வேன்
இறைவா, பரிசுத்தரே, உமது பரிசுத்தத்தை எனக்கும் தாரும்.
என் வாழ்க்கையை இன்னும் பரிசுத்தமுள்ளதாக மாற்றும்.
என் வாயின் தாறுமாறுகள் என்னை விட்டு வெளியே போகட்டும்
என் உதட்டின் பேச்சுகள் அடியோடு அழிந்து போகட்டும்.
இறைவா, என் தேவனே என்னை நீர் இரட்சித்தருளும்.
கருணையின் தேவா, இப்பாரிலே நீர் போற்றுதலுக்குரியவர்.
உம்முடைய மேலான நாமமே எனக்கு உயர்ந்த அடைக்கலம்.
வரும் வருடம் 2010 ல் நான் உமக்காக வாழணும்.
உமக்கு பிரியமுள்ள பிள்ளையாக, நல்ல மகனாக மாறணும்.
உமக்கு சித்தமானதை உம்மிடம் கேட்டு அதை செய்யணும்.
உம்முடைய சத்தத்தை நான் கேட்கணும்.
உம்முடைய மகிமையை நான் காண வேண்டும்.
இராஜனே என் தேவனே நீர் பெரிய காரியங்களை செய்வீர்.
இறைவா, எனக்கு நீரே நண்பர், அன்பர், இன்பர் என் எல்லாம்.
நீர் வந்து என்னுடன் புதிய ஆண்டை கொண்டாட விரும்புகிறேன்.
நான் ஏமாந்து, வெட்கப்பட்டு போகவே மாட்டேன்.
நீரெந்தன் மணவாளன். என் தேவன். ஆமென் அல்லேலூயா!

01-01-2010

★

இறைவா, என் இயேசுவே, பரிசுத்தரே, சிங்காசனத்தில் வீற்றிருப்பவரே
உமக்கு என்னுடைய ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கின்றேன்.
இறைவா, என்னை இந்த புது வருடத்திற்குள்ளாக நடத்தியமைக்காக நன்றி
இராஜாதி இராஜா என் தேவாதி தேவா நீர் பூரண ஐசுவரியமுள்ளவர்.
என்மேல் பிரியமாய் இருக்கின்ற என் தேவனே நீர் வாழ்க.
நீர் மெய்யான கர்த்தர். ஆலோசனையின் தேவன். நீர் பெரியவர்.
என்றென்றும் மாறாதவர் நீர்தான் என் இயேசு மகாராஜன்.
உம்மைப்போல என்னை மாற்றுமைய்யா! எனக்கு நீர்தான் வேண்டுமைய்யா!
நீங்க மாத்திரம் எனக்கு போதும் நீங்களே என் வாழ்வின் பாக்கியம்
இறைவா, எனக்கு பிடித்தமானவைகளை நீர் எனக்கு தருகின்றீர்.
நீரே எனக்கு சித்தத்தையும் தந்து அதை நடத்த ஆலோசனை தருகின்றீர்
இறைவா, இந்த வருடத்தில் நான் சிறப்பான காரியங்களை செய்ய வேண்டும்
இயேசுவே, இந்த வருடத்தில் உம்முடைய ஊழியத்தை துவங்க வேண்டும்.
இராஜாவே, இந்த வருடத்தில் நான் மிகுந்த அபிஷேகத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்
அன்பே உருவான தேவனே, இந்த வருடம் என் குடும்பம் உம்மை அறிய வேண்டும்
இந்த வருடம், மிகப்பெரிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.
இந்த வருடம், உம்மை அறியும் அறிவில் பல படிகள் கடக்க வேண்டும்.
உமக்கு பிரியமான மகனென்று இந்த வருடம் பெயரெடுக்க வேண்டும்.
உமக்கு பிடித்தமான மகனாக நான் வாழ வேண்டும்.
உமக்கு அடுத்தபடியான காரியங்களையே சிந்திக்க வேண்டும்.
இந்த வருடம் அதிகமானோருக்கு சுவிசேஷம் சொல்ல வேண்டும்.
இந்த வருடம் அற்புதத்தின் வருடமாக நீர் மாற்றித் தந்திட வேண்டும்
என் தேவனே, என் இராஜாவே நீரே என் பெலனாயிருக்கின்றீர்.
உம்மிடத்திலே நான் இந்த வருடம் அதிகமாக வளர வேண்டும்.
இந்த வருடம் என்னில் இன்னும் பல மாற்றங்கள் நிகழ வேண்டும்.
இந்த வருடம் ஒரு பெரிய மாறுதலை நான் காண வேண்டும்.
என் இருதயத்தில் இன்னும் ஒரு பரிசுத்த மாற்றம்!!!
என் ஆத்மாவில் இன்னும் ஒரு புதிய பெலன்!!!
என் மாம்சத்தில் முழு சுகாரோக்கியம். நல்ல பழக்கவழக்கம்!!!
தேவனே என் தேவாதி தேவனே உம்மை அறியணுமே!!!
இந்த வருடம் உம்முடைய சத்தத்தை கேட்கணுமே!!!
இந்த வருடம் வேதத்தை அதிகமாக தியானிக்கணுமே!!!
இந்த வருடம் உம்மை நான் கண்டடையணுமே!!!
இன்னும் தரிசனங்களை நான் பெற்றுக்கொள்ளணுமே!!!
இன்னும் அற்புத, அடையாளங்களை நான் காணணுமே!!!
இறைவா, உம் பாதம் நான் அமர்ந்திருக்க வேண்டுமே! ஆமென்.

02-01-2010

★

இறைவா என் தேவா உமக்கே நான் ஆராதனை செய்வேன்
நீர் பெரியவர் துதிக்கு பாத்திரர் என்றென்றும் உள்ளவரே!!
ஆராதனைக்குரியவர் என் அன்பின் தேவன் நீரொருவரே.
நீங்க இல்லாத ஊழியம் எனக்கு வேண்டாமப்பா!!
நீரே எங்களை வழிநடத்தி செல்பவர். உமக்கே ஸ்தோத்திரம்.
என் மகிமையின் தேவா உம் துதி சொல்லி வருவேன் நான்.
நீர் கூடாரங்களில் சிறந்தோர். உம்மை நான் சங்கீதம் பாடுவேன்.
இறைவா நீர் உன்னதங்களில் உட்கார்ந்திருக்கின்றீர்.
என்னை கன்மலையின் மேல் நிறுத்தியிருக்கின்றீர்
நான் ஒருபோதும் வெட்கப்பட்டு போவதில்லை.
இராஜாதி இராஜனே என் தேவனே நீர் பெரிய காரியங்களை செய்பவர்.
உம்முடைய நாமமே எனக்கு என்றென்றும் உயர்ந்த அடைக்கலம்.
இறைவா, உம்முடைய பொற்பாதம் அமர்ந்து உம் குரலை கேட்டு மகிழ்வேன்
உம்முடைய பிரசன்னத்திலே உம்மை நான் மகிமைப்படுத்துவேன்.
என் எழுத்துக்களில் உம்மை உயர்த்தியே எழுதுவேன்.
அன்பே என் ஆராதனைக்குரியவரே நீர் வாழ்க.
உம்முடைய நாமத்தை நான் என்றென்றும் உயர்த்தி மகிழ்வேன்
நீர் நல்லவர் சர்வ வல்லவரென்று போற்றி மகிழ்ந்திடுவேன்
அப்பா உம்முடைய கிருபையை எண்ணியெண்ணி உம்மை துதிப்பேன்.
நீர் பெரிய காரியங்களை செய்கின்றீர். நன்றி சொல்லிடுவேன்.
உம்மை உயர்த்துகின்ற துதி என் நாவில் எப்பொழுதும் இருக்கும்.
நான் உம்முடைய இரக்கத்தின் ஐசுவரியத்தை அறிவிப்பேன்.
உம்முடைய அன்பை எல்லோருக்கும் பறைசாற்றிடுவேன்
என் கன்மலை நீரே! என் விருப்பமும் வாஞ்சையும் நீர் தானே!
இறைவா என் ஏக்கமெல்லாம் நீர் மாத்திரம் தான் ஐயா!
உம்முடைய தயவினாலே நான் மீட்கப்பட்டேன். இரட்சிக்கப்பட்டேன்.
இறைவா, உமக்கே என் நன்றிகளை ஏறெடுக்கின்றேன்.
நீர் என்னோடு பேச வேண்டும். அதை நான் கேட்க வேண்டும்.
உம்முடைய இரகசியங்களை எனக்கு வெளிப்படுத்த வேண்டும்
இறைவா உம்முடைய இராஜ்ஜியத்தில் சேர வேண்டும்.
இறுதிவரை உம்மில் நான் வாழ வேண்டும்.
இயேசுவே உம்முடைய அபிஷேகத்தினால் நான் நிறைய வேண்டும்
என் மனைவி கனிதரும் செடியாக வளர வேண்டும்.
உண்மை மரியாளான பெண்ணாக வாழ வேண்டும்.
குணமுள்ள ஸ்திரியாக உம்மை அறிய வேண்டும்.
இறைவா எல்லா புகழும் ஸ்தோத்திரம் கனமும் உமக்கே ஆமென்,

03-01-2010

என் தேவனே, என் சர்வ வல்லவரே, உமக்கே ஸ்தோத்திரங்கள்.
இறைவா எனக்கு நல்ல புத்தியை தாரும்.
குடும்பத்தை நடத்த ஆலோசனைகளை எனக்குத் தாரும்.
நான் புத்தியீனன். நான் ஒன்றுமற்றவன். என்னிடத்தில் ஒன்றுமில்லை.
இறைவா, நல்ல கணவனாக வாழ எனக்கு கிருபை செய்யும்.
கணவனுக்கு வேண்டிய அத்தனை நலன்களையும் எனக்கு போதியும்.
குடும்ப காரியங்களை கவனிக்கவும் எனக்கு கிருபை செய்யும்.
சிறந்த குடும்பம் என்று அநேகர் மெச்சிக்கொள்ள உதவி செய்யும்.
கர்த்தருக்குள் சிறந்த குடும்பம் என்று இவ்வுலகம் சொல்லட்டும்.
இறைவா எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. எனக்கு போதியும்.
இராஜாதி இராஜனே என்னை கணவனாக பரிசுத்தப்படுத்தும்.
இயேசுவே என்னை கணவன் என்ற ஒருபடி மேலே உயர்த்தினீர்.
இனி நான் வாலிபன் இல்லை. உயர்ந்த ஸ்தானத்தில் அமர்த்தினீர்.
இறைவா, இந்த நிலையில் நான் உமக்கு பிரியமானதை நடப்பிக்க வேண்டும்
ஆண்டவரே என் இயேசு தேவனே நீர் சர்வத்திற்கும் வல்லவர்.
உம்முடைய நாமம் அதிசயிக்கத் தக்கது. நீர் பெரியவர்.
உம்முடைய கண்களில் எனக்கு கிருபை கிடைப்பதாக.
இறைவா, அடியேனுக்கு ஒரு வீட்டை வாங்க கிருபை செய்வீராக.
இறைவா, அடியேனின் வேலையை ஆசீர்வதிப்பீராக.
இறைவா, அன்பான நண்பர்களின் வேலையை ஆசீர்வதிப்பீராக.
வேலையிழந்தோருக்கு வேலையைத் தருவீராக.
இரட்சகரே என் நல்லவரே உந்தன் நாமத்தை நான் உயர்த்திடுவேன்
தேவனே குடும்பமாக வாழ எனக்கு கிருபை செய்யுமே!
நான் உம்மை போற்றி புகழ்ந்திடுவேன். அதுவே எனக்கு சாட்சியாகும்.
உமக்கும், எனக்கும் உடன்படிக்கையாவதும் அதுவே!
என் பரலோக பிதாவே உம்மை நான் நம்புகிறேன்.
உம்மிடத்தில் எனக்கு என்றென்றும் இளைப்பாறுதலுண்டு.
நீரென் அழுக்கை நீக்கி பரிசுத்த வஸ்திரம் தந்தீர்.
ஆனால் நானோ அதை அணியாதவனானேன்.
இறைவா, உம்மைப்போல என்னை மாற்றுமைய்யா?!
நீரே என் அடைக்கலம். நீரே என் பெலனும் - கோட்டையும்.
உம்மால் நான் ஒரு சேனைக்குள் பாய்வேன்.
உம்மை நான் ஒருநாளில் துதிப்பேன்.
உம்முடைய குரலை நான் அனுதினமும் கேட்கப்போகிறேன்.
உம்முடைய தூதர்கள் எப்பொழுதும் உமக்கு பணிவிடை செய்வார்கள்
சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர். பரிசுத்தர். பரிசுத்தர். ஆமென்.


Appeals
from
Affliction
கடவுளின் ஒருமை—பிதா, மகன்,
பரிசுத்த ஆவி—பலவீனத்தில்
உள்ளவர்களைத் தாங்கி,
வெற்றியின் கைகளால் இணைக்கின்றனர்